# தமிழ் 3


YAMAHA MT-01
WHEEL BASE: 1525 mm
TOP SPEED: 209 kmph
DISPLACEMENT:

# தமிழ்

## தரம் 3

## பாடநூல்

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | |
|---|---|
| முதலாம் பதிப்பு | - 1999 |
| இரண்டாம் பதிப்பு | - 2000 |
| மூன்றாம் பதிப்பு | - 2001 |
| நான்காம் பதிப்பு | - 2002 |
| ஐந்தாம் பதிப்பு | - 2003 |
| ஆறாம் பதிப்பு | - 2004 |
| ஏழாம் பதிப்பு | - 2005 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

2006/ෆද/3/38/80,000

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உயர்வானாய்
நமதேர் வலியானாய்

நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழு மில்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமென்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு

## நூன்முகம்

இந்நூல் 3 ஆம் தரத்துக்கென மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய சகலருக்கும் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

**பி. எச். பி. கீகனகே**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
2005.04.27

## முன்னுரை

"தமிழ் - தரம் 3" என்னும் இந்நூல் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்றது.

இது பாடசாலைகளில் தரம் - 3 பிள்ளைகளுக்காக இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

ஈ. டபிள்யூ. அபேநாயக்க,
பதில் மேலதிக கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய"
பத்தரமுல்லை.
*02.03.1999*



2. S.P.C. - 050394

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தரம் மூன்றிற்கான தமிழ்ப்பாடநூல் எமது நாட்டின் கல்வி சீர்திருத்தங்களினதும் மீளமைத்தலினதும் முக்கியமானதோர் அம்சமாகும். இலங்கையின் ஒவ்வொரு பிள்ளைக்கும், தேசாபிமானமுள்ள, சமாதானத்தை விரும்பும் தேர்ச்சிமிக்க பிள்ளையாக வளர்வதற்கான உறுதியான அத்திவாரத்தை வழங்குதலுக்கான பெரும் வலியுருத்தல் ஆரம்பக்கல்வியின் மீது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாடநூல் பிள்ளையின் கவனத்தை ஈர்த்து அவதானத்தை நிலை நிறுத்தும் அதே வேளையில், பிள்ளையின் கவனத்தைக் கலைக்கும் வேறு பலமான செல்வாக்குகள் நிலவும் தற்கால உலகிற்கு அத்தியாவசியமான அறிவை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோரும் ஆசிரியர்களும் இப்பாடநூலிற்கு உரித்தான முக்கியத்துவத்தையும், கௌரவத்தையும் வழங்குவார்கள் என நம்புகிறோம்.

இப் பாடநூலைத் தயாரித்தல், தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக்கல்வித் துறையின் ஆளணிக் குழுவொன்றினால் மிக கவனத்துடனும் அர்ப்பணிப்புடனும் கலாநிதி. ஜீ.எல்.எஸ் நாணயக்கார அவர்களின் திறமையான தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இப்பாரிய தேசிய தேவைக்கான அவர்களது முயற்சியை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம.

## அறிமுகம்

கல்விச் சீர்திருத்தப் புதிய பிரேரணைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்பக்கல்விப் பாடவிதானத்தின் தரம் மூன்றிற்கான மொழிப் பாடத்திட்டத்திற்கேற்ப இப் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை - பிள்ளைகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான சூழலாக அமைய உதவும் சாதனங்களின் மொழிப் பாடநூல் முக்கியமானதாகும். மாணவர்களின் உளப்பாங்கிற்கேற்பப் . பல வண்ணப்படங்களையும், மொழி விருத்திக்கான படிமுறை அம்சங்களையும் இப்பாடநூல் கொண்டமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடநூலைப் பொருத்தமாகப் பயன்படுத்தினால் உரிய மொழித் தேர்ச்சியை மாணவர்கள் அடைய முடியும். இதன் வெற்றி ஆசிரியர்களின் வழிகாட்டலிலும், பெற்றோரின் ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது.

இப்பாடநூல் உரிய காலத்தில் உயர் மட்டத்தில் நிறைவு செய்வதற்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டிய பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க அவர்களுக்கும், அர்ப்பணிப்புடன் கருமமாற்றிய நூலாக்கக் குழுவினர், பரிசீலனைக் குழுவினர், சித்திரங்கள் வரைந்தோர், எழுத்தமைப்புச் செய்தவர் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கலாநிதி ஜீ.எல்.எஸ். நாணயக்கார,
பணிப்பாளர் ஆரம்பக்கல்வி,
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம.

# அறிமுகம்

தமிழ்மொழிப் புதிய பாடத்திட்டத்திற்கமைய இப்பாடநூல் எழுதப்பட்டுள்ளது. ஆரம்ப வகுப்புகளில் மாணவர்கள் தமது தாய்மொழியில் உரிய தேர்ச்சியை எய்துதல் இன்றியமையாததாகும். மொழித்தேர்ச்சியே, ஏனைய பாடங்களைக் கற்பதற்கும், மாணவரின் பல்வேறு ஆற்றல்கள், திறன்கள், மனப்பாங்குகள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கும் உதவல்லது.

செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன் களையும் சிந்தித்தல், அனுமானித்தல், தொடர்புகாணல் போன்ற மொழிசார் உளத்திறன்களையும் கருத்திற் கொண்டு இப்பாடநூலின் விடய அலகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மொழியில் மாணவர் எய்த வேண்டிய அத்தியாவசியக் கற்றல் திறன்களை அனுசரித்தே இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. எல்லா மாணவர்களும் அத்திறன்களில் தேர்ச்சியடைதலை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

பாடநூலின் ஒவ்வோர் பாடத்தின் கீழும் தரப்பட்டுள்ள ஆசிரியருக்கான குறிப்புகள், மொழிப் பயிற்சிகளை மீளவலியுறுத்த உதவுவன பெற்றோர்களும் இவற்றை அனுசரித்துத் தமது பிள்ளைகளுக்கு உதவலாம். இவை பற்றிய விரிவான விளக்கம் ஆசிரியர் கைந்நூலில் தரப்பட்டுள்ளது.

மாணவர்கள் சுயமாகக் கற்பதற்கேற்ற படிமுறையில் விடயக்கூறுகள் ஒழுங் கமைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பான பயிற்சிகள் செயல் நூலில் தரப்பட்டுள்ளன அப் பயிற்சிகளைத் தழுவி மேலதிக பயிற்சிகளை ஆசிரியர் வடிவமைத்து வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடநூலின் விடயக்கூறுகள், பாடத்திற்குள்ளும், பாடங்களுக்கிடையிலும், ஒன்றி ணைத்துக் கற்பிப்பதற்கேற்றவாறு திட்டமிடப்பட்டுள்ளன. பாடசாலை வளங்களையும் நடைமுறை வாய்ப்புக்களையும் அனுசரித்து மாணவரின் கற்றல் செயற்பாடுகள் அமைய வேண்டும். மாணவர்கள் உரிய மொழித் தேர்ச்சியை அடைய இப்பாடநூல் வழிவகுக்கும் என நம்புகின்றோம்.

**நூலாக்கக் குழு.**

### பணிப்பு

*பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க*
*பணிப்பாளர் நாயகம்,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

### மேற்பார்வை

*கலாநிதி ஜீ.எல்.எஸ். நாணயக்கார*
*பணிப்பாளர், ஆரம்பக்கல்வி,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

*திரு டபிள்யூ. சியம்பலாகொட*
*பணிப்பாளர், ஆரம்பக்கல்வி,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

### நூலாக்கக் குழு

*திரு பூ. சுப்ரமணியம்*
*பணிப்பாளர், தமிழ்த்துறை,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

*ஜனாப் எஸ்.ஐ.எம்.எச். கரீம்*
*செயற்றிட்ட அதிகாரி (ஆரம்பக்கல்வி),*
*தேசிய கல்வி நிறுவகம்.*

*திரு வி.என்.எஸ். உதயசந்திரன்*
*உதவிச் செயற்றிட்ட அதிகாரி (ஆரம்பக்கல்வி),*
*தேசிய கல்வி நிறுவகம்.*

*ஜனாப் வை.எல்.எம். றாசிக்*
*பிரதி ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

*திரு ஏ. செல்வேந்திரன்*
*திட்ட அலுவலர், சீடா மூலவள நிலையம்,*
*ஹற்றன்.*

### பரிசீலனைக் குழு

*பேராசிரியர் சி. தில்லைநாதன்*
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்.*

*திரு ந. சிதம்பரநாதன்*
*முன்னாள் பணிப்பாளர்,*
*தேசிய கல்வி நிறுவகம்.*

*ஜனாப் எம்.பி.எம்.எம். ஷிப்லி*
*செயற்றிட்ட அதிகாரி (ஆரம்பக்கல்வி),*
*தேசிய கல்வி நிறுவகம்.*

### ஓவியம்

*திரு எஸ். ராமசந்திரன் (சந்திரா)*
*திரு என்.எஸ். ஞானகுருபரன்*

### கணனி எழுத்தமைப்பு

*செல்வி கமலவேணி கந்தையா*
*ஆசிரியர் தொடர் கல்விப் பிரிவு - 01*
*தேசிய கல்வி நிறுவகம்.*

### பதிப்பாசிரியர்கள்

*திரு பூ. சுப்ரமணியம்*
*ஜனாப் வை.எல்.எம். றாசிக்*
*திரு வி.என்.எஸ். உதயசந்திரன்*

உள்ளடக்கம் பக்கம்


1. நல்ல பழக்கங்கள் ........................................ 01
2. பயன் பல பெறுவோம் ........................................ 04
3. பயில்வோம் ........................................ 08
4. திருக்குறல் ........................................ 11
5. காகமும் நரியும் ........................................ 14
6. வானம் கறுத்தால் ........................................ 19
7. மரங்கள் வளர்ப்போம் ........................................ 21
8. செய்து பார்ப்போம் ........................................ 25
9. கடிதம் ........................................ 28
10. கிளித்தட்டு ........................................ 32
11. வீதி விதிகள் ........................................ 39
12. செய்தித்தாள் ........................................ 43
13. சாதனை படைத்த இளைஞன் ........................................ 46
14. நலமாக வாழ்வோம் ........................................ 52
15. பழமொழிகள் ........................................ 55
16. வீட்டுத்தோட்டம் ........................................ 57
17. முயற்சி வெல்லும் ........................................ 60
18. விடுகதைகள் ........................................ 65
19. சிறுவர் தினம் ........................................ 67
20. மழை ........................................ 71
21. தன்கையே தனக்குதவி ........................................ 74
22. உழவுத் தொழில் ........................................ 79
23. யார் குற்றவாளி ........................................ 83
24. தொடர்பு கொள்வோம் ........................................ 87
25. உலக நீதி ........................................ 90

பாடம் - 1

# நல்ல பழக்கங்கள்



1. அன்புடன் பழகுவோம்.
2. ஆசிரியர் சொற்படி நடப்போம்.
3. இன்சொல் பேசுவோம்.
4. உண்மை உரைப்போம்.
5. உயிர்கள் மீது கருணை காட்டுவோம்.
6. ஊக்கமுடன் கற்போம்.
7. ஏழைகளுக்கு இரங்குவோம்.
8. ஒற்றுமையாக வாழ்வோம்.
9. சுத்தம் பேணுவோம்.
10. பிறருக்கு உதவி செய்வோம்.
11. பெரியோரை மதிப்போம்.
12. முதியோருக்கு உதவுவோம்.

நல்ல பழக்கங்களைக் கடைப்பிடித்து
நல்லவர்களாக வளர்வோம்.

**பயிற்சிக்கான விடைகளைப் பாடநூலில் எழுத வேண்டாம். அப்பியாசப் புத்தகத்தில் எழுதுங்கள்.**

## பயிற்சி – 1

1. **உயிர் எழுத்துக்களை வரிசைக்கிரமமாக எழுதுங்கள்.**

   அ ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.......

2. **தரப்பட்ட சொற்களை அகர வரிசைப்படி ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.**

   அன்பு, உயிர், ஐந்து, ஏழை, ஆசிரியர், ஈட்டி, ஊக்கம், ஒழுக்கம், இலை, ஓலை, எலி, ஔவை

   | | |
   |---|---|
   | அன்பு............. | ..எலி............ |
   | ..ஆசிரியர்......... | ...ஏழை.......... |
   | ...இலை............ | ...ஐந்து......... |
   | ..ஈட்டி............ | ....ஒழுக்கம்...... |
   | ..உயிர்........... | ....ஓலை......... |
   | ...ஊக்கம்......... | ........ஔவை... |

3. **எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களை எழுதுங்கள்.**

   1. ள் க ழை ஏ – ..ஏழைகள்...
   2. த ம் த் சு – ..சுத்தம்......
   3. ம் போ ற் க – .கற்போம்.....
   4. ள் க யி ர் உ – ..உயிர்கள்.
   5. ர் யோ தி மு – ..முதியோர்....

4. **பின்வரும் எழுத்துக்களில் தொடங்கும் இரண்டு சொற்களை எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ | அன்பு | அணில் |
| 2. | இ | இலை | இ[illegible] |
| 3. | உ | உலகம் | உரல் |
| 4. | ஏ | ஏர் | ஏரி |
| 5. | ஒ | ஒன்று | ஒன்பது |
| 6. | க | கல் | கப்பல் |
| 7. | ம | மகன் | மணி |
| 8. | கீ | கீரை | கீரி |
| 9. | வெ | வெடி | வெப்பம் |
| 10. | சோ | சோறு | சோடா |

4. **பின்வரும் எழுத்துக்களை வைத்துச் சொற்களை ஆக்குங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ங் | சங்கு | 6. | ச் | பச்சை |
| 2. | ஞ் | இஞ்சி | 7. | ட் | பட்டம் |
| 3. | ண் | மண்ணா | 8. | ந் | பந்து |
| 4. | ம் | அம்மா | 9. | ர் | ஏர் |
| 5. | ல் | குயில் | 10. | ன் | மான் |

5. **அப்பியாசப் புத்தகம் ஒன்றில் தினமும் ஒரு புதிய சொல்லை எழுதுங்கள்.**

குறிப்பு:- 
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* புதிய சொற்களை மாணவர்கள் அப்பியாசப் புத்தகத்தில் உறுப்பமைய எழுதவழிப்படுத்துக.



3. S.P.C. - 050394

# பயன் பல பெறுவோம்.



தபாலகம் செல்வோம்.
முத்திரை வாங்குவோம்.
கடிதம் அனுப்புவோம்.
தொலைபேசியில் பேசுவோம்.



நூலகம் செல்வோம்.
நூல்கள் பல படிப்போம்.
பத்திரிகைகள் வாசிப்போம்.
செய்திகளை அறிவோம்.



வங்கிக்குப் போவோம்.
பணத்தைச் சேமிப்போம்.
தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.
சிக்கனமாய் வாழ்வோம்.



சந்தைக்குச் செல்வோம்.
காய்கறிகள் வாங்குவோம்.
பழங்கள் வாங்குவோம்.
உணவு சமைப்போம்.
உண்டு மகிழ்வோம்.

எமது தேவைகளை நாமே நிறைவு செய்வோம்.

## பயிற்சி – 2

1. விடைகளை எழுதுங்கள்.

அ. இரண்டு வங்கிகளின் பெயர்கள்
மக்கள்வங்கி, இலங்கை வங்கி.

ஆ. கடிதம் அனுப்புவதற்கு வேண்டிய பொருட்கள்
கடிதஉறை, முத்திரை........

இ. அண்மையிலுள்ள அரசினர் வைத்தியசாலை
நுந்தானை அரசினர் வைத்தியசாலை

ஈ. உங்கள் வீட்டிற்கு அண்மையிலுள்ள தபாலகம்
மூனாய் உ.ப. தபாலகம்......

உ. சந்தையில் வாங்கக்கூடிய ஐந்து பொருட்கள்
பழங்கள், மீன்கள், காய்கறிகள், அரிசி, தேங்காய்

2. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக இணையுங்கள்.

| அ | ஆ |
| --- | --- |
| தபாலகம் | பணம் |
| சந்தை | புத்தகங்கள் |
| வைத்தியசாலை | முத்திரை |
| நூலகம் | மருந்து |
| வங்கி | பழங்கள் |

3. எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களை ஆக்குங்கள்.

1. தி மு ரை த் ..முத்திரை........
2. க ல ம் நூ ..நூலகம்........
3. த க டி ம் ..கடிதம்........
4. ம் போ ப் மி சே ..சேமிப்போம்.....
5. பா த க ல ம் ..தபாலகம்.......

4. முதலெழுத்துடன் "ா" சேர்த்து நீண்டு ஒலிக்கும் சொற்களை எழுதுங்கள்.

| பட்டு | – | பாட்டு |
|---|---|---|
| 1. பணம் | – | .பாணம் |
| 2. மனம் | – | .மானம் |
| 3. பட்டி | – | .பாட்டி |
| 4. படம் | – | .பாடம் |
| 5. சம்பல் | – | .சாம்பல் |

5. ஐந்து முத்திரைகளைச் சேகரித்து அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டுங்கள்.

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்குக.
* பொழுதுபோக்காக முத்திரை சேகரிக்கும் பழக்கத்தை மாணவர்களிடம் ஏற்படுத்துக.

பாடம் - 3

# பயில்வோம்.



தேனிருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டுபோல்
சீனியுள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்புபோல்

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியைப் போல்
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்

பள்ளமான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்.

- கவிஞர் அழ. வள்ளியப்பா

பயிற்சி - 3

(1) பின்வரும் இடங்களைத் தேடிச் செல்வது எது?

| | | |
|---|---|---|
| தேனிருக்கும் இடம் | - | வண்டு |

(அ) சீனி உள்ள இடம் - எறும்பு

(ஆ) பழம் நிறைந்த சோலை - கிளி

(இ) வளம் நிறைந்த நாடு - மக்கள்

(ஈ) பள்ளமான இடம் - வெள்ளம்

(உ) நூல்கள் உள்ள இடம் - மாணவர்கள்

(2) ஒத்து ஒலிக்கும் சொற்களை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| தேன் | - | பேன் |

(அ) பள்ளம் - வெள்ளம்

(ஆ) நாடி - ஆடி

(இ) வண்டு - குண்டு

(ஈ) மடம் - படம்

(உ) பயில் - துயில்

(3) பின்வரும் வாக்கியங்களிலுள்ள பயனிலைச் சொற்களை எழுதுங்கள்.

(அ) குயில் கூவியது. கூவியது

(ஆ) குழந்தை சிரித்தது. சிரித்தது

(இ) மழை பெய்தது. பெய்தது

(ஈ) முயல் ஓடியது. ஓடியது

(உ) காற்று வீசியது. வீசியது

(4) இடைவெளிகளை நிரப்பி எழுதுங்கள்.

| நாய் குரைக்கும். |
|---|

(அ) சேவல் ....................

(ஆ) ஆடு ....................

(இ) மாடு ....................

(ஈ) காகம் ....................

(உ) கோழி ....................

(5) எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களை ஆக்குங்கள்.

1. பு, று, எ, ம் - ....................
2. சோ, ஞ், லை, பூ - ....................
3. வெ, ம், ள, ள் - ....................
4. ம, க, ள், க் - ....................
5. சி, ர், ஆ, ய, ரி - ....................

(6) உங்களுக்குத் தெரிந்த பறவைகள் ஐந்தின் பெயர்களை எழுதுங்கள்.

1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்குக.
* பல்வேறு பறவைகளின் படங்களைச் சேர்த்து பறவைகள் புத்தகம் ஒன்றை ஆக்க மாணவர்களை வழிப்படுத்துக.

# திருக்குறள்



நம் தாய்மொழி தமிழ். தமிழ்மொழியில் பல சிறந்த நூல்கள் உள்ளன. அவற்றுள் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்தார். அவருக்குத் தெய்வப்புலவர், பொய்யாமொழிப்புலவர் எனப் பல பெயர்கள் உண்டு.

திருக்குறளில் நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. குறட்பாக்கள் இரண்டு வரிகளைக் கொண்டவை. அனைவருக்கும் ஏற்ற நல்ல கருத்துக்களைத் திருக்குறள் கூறுகிறது.



4. S.P.C. - 050394

நாம் உண்மை பேச வேண்டும். தர்மம் செய்ய வேண்டும். நாம் இளமையிலேயே கல்வி கற்க வேண்டும். கல்வியே சிறந்த செல்வம். இவ்வாறு பல கருத்துக்களைத் திருக்குறள் கூறுகிறது.

திருக்குறளை **"உலகப் பொதுமறை"** என்றும் **'தமிழ்மறை'** என்றும் கூறுவர்.

திருக்குறளை நாமும் கற்று, நல்ல பயன் பெறுவோம்.

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

**பயிற்சி - 4**

**(1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. திருக்குறளை இயற்றியவர் யார்?
2. திருவள்ளுவரின் ஏனைய பெயர்கள் யாவை?
3. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன
4. செல்வங்களுள் சிறந்த செல்வம் எது?
5. திருக்குறள் கூறும் நல்ல கருத்துக்கள் இரண்டினை எழுதுங்கள்.

## (2) பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | உண்மை | - | பொய் |
| (அ) | இளமை | - | முதுமை |
| (ஆ) | தர்மம் | - | அதர்மம் |
| (இ) | நன்மை | - | தீமை |
| (ஈ) | சூடு | - | குளிர் |
| (உ) | இன்பம் | - | துன்பம் |

## (3) பொருத்தமான முடிக்கும் சொல்லை இணையுங்கள்.

| | | |
|---|---|---|
| (அ) | நாய் | பாடினாள் |
| (ஆ) | காகம் | படித்தார்கள் |
| (இ) | அவன் | குரைத்தது |
| (ஈ) | பழங்கள் | பறந்தது |
| (உ) | கமலா | வந்தான் |
| (ஊ) | மாணவர்கள் | விழுந்தன. |

## (4) ஒவ்வொரு சொற்றொகுதியிலும் உள்ள வேறுபட்ட சொல்லைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

1. வாழைப்பழம், மாதுளம்பழம், கத்தரிக்காய், மாம்பழம்
2. நாய், காகம், ஆடு, மாடு
3. ஆசிரியர், அதிபர், மாணவன், விவசாயி
4. உழுந்து, இஞ்சி, கடலை, பயறு
5. விமானம், கப்பல், தோணி, வள்ளம்

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* கல்வி தொடர்பான இரண்டு திருக்குறள்களை மனனம் செய்ய வழிப்படுத்துக.

# காகமும் நரியும்



ஓர் ஊரிலே ஒரு பாட்டி இருந்தார். அவர் ஒரு வேப்ப மரத்தடியில் வடை சுட்டு விற்று வந்தார். ஒருநாள் ஒரு காகம் அந்த மரத்தில் வந்து அமர்ந்தது. வடையின் வாசம் காகத்தின் மூக்கைத் துளைத்தது.


காகத்திற்கு வடை தின்னும் ஆசை ஏற்பட்டது. காகத்திடம் பணம் இல்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தது. பாட்டியிடம் சென்றது.

"பாட்டி பாட்டி என்னிடம் பணம் இல்லை. ஆனால் உனக்கு உதவியாக வேலை செய்கிறேன். ஒரு வடை தருவாயா?" என்று கேட்டது.

பாட்டி சிரித்தார். "உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று கேட்டார்.

"பாட்டி, அடுப்பு எரிப்பதற்கு, நான் சுள்ளி விறகு கொண்டு வந்து தருகிறேன்" என்று காகம் கூறியது. பாட்டி சம்மதித்தார். காகம் காட்டில் கிடந்த சிறிய குச்சிகளை வாயில் கௌவி எடுத்து வந்தது. பலமுறை கொண்டு வந்து குச்சிகளைக் குவித்தது. பாட்டி மகிழ்ச்சி அடைந்தார்.

"இதோ உன் கூலி" என்று கூறி பாட்டி ஒரு வடையைக் கொடுத்தார். காகம் வடையைக் கௌவிக் கொண்டு பறந்தது. தான் குடியிருக்கும் ஆலமரத்திற்கு வந்தது. வடையைக் கௌவியபடி அங்கும் இங்கும் பார்த்தது. இதனை ஒரு நரி கண்டது. அந்த வடையை அபகரிக்க எண்ணியது. தந்திரத்தால் காகத்தை ஏமாற்ற நினைத்தது. உடனே காகத்தைப் புகழத் தொடங்கியது.



"காக்கையாரே! நீ மிகவும் அழகான பறவை. உனது கருமையான மேனி பளபளக்கின்றது. உனது பார்வையும் பிரகாசமானது. நீ பாடினாலும் இனிமைதான். உன்

பாடலைக் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறது. ஒரு பாட்டுப் பாடுவாயா?" என்று கேட்டது.



காகத்திற்கு நரியின் தந்திரம் புரிந்து விட்டது. அது தனது கூட்டில் வடையை வைத்து விட்டு வந்தது. "நரியாரே, எனது பாட்டைக் கேட்க விருப்பமா? உண்மையைச் சொல்" என்று கேட்டது. நரிக்குப் பெரிய ஏமாற்றம். அது நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை. காகத்தைக் கோபத்துடன் பார்த்தது. உடனே காகம் சிரித்தது. "ஏன் கோபமாகப் பார்க்கிறாய்? என்னை ஏமாற்றலாம் என்றா நினைத்தாய்? அது முடியாது. தந்திரத்தால் வடை சாப்பிடலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடு, வேண்டுமானால், அதோ அந்தப் பாட்டியிடம் போய் உன்னால் இயன்ற வேலையைச் செய்து கொடு, வடை தருவார்" என்று கூறியது. காகம் கூறியபடி, நரி பாட்டியிடம் சென்றது. பாட்டிக்கு வேண்டிய உதவிகளைச் செய்தது. பாட்டி நரிக்கும் வடை கொடுத்தார்.

"உழைத்து வாழ்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே"

பயிற்சி - 5

(1) **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. காகத்திற்கு என்ன ஆசை ஏற்பட்டது?
2. பாட்டி காகத்திற்குக் கொடுத்த கூலி என்ன?
3. காகம் வடை வைத்திருப்பதை எது கண்டது?
4. நரி காகத்தை ஏன் புகழ்ந்தது?
5. "தந்திரத்தால் வடை சாப்பிடலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடு" என்று எது எதற்குக் கூறியது?

(2) **ஒத்தகருத்துள்ள சொற்களை எழுதுங்கள்.**

1. வாசம் - மணம்
2. பணம் - காசு
3. மகிழ்ச்சி - சந்தோஷம்
4. மேனி - உடல்
5. விருப்பம் - ஆசை

(3) **பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுங்கள்.**

1. உழுந்து + வடை - உழுந்தம் வடை
2. வாழை + மரம் - வாழைமரம்
3. வாழை + பழம் - வாழைப்பழம்
4. நீர் + குடம் - நீர்க்குடம்
5. பூ + சோலை - பூஞ்சோலை

(4) ஒத்த கருத்தைத் தரக்கூடிய இரு சொற்களை எழுதுங்கள்.

| சூரியன் | கதிரவன், ஞாயிறு |
|---|---|

1. சந்திரன் ........ , ........
2. வீடு ........ , ........
3. உண்மை ........ , ........
4. தாய் ........ , ........
5. தகப்பன் ........ , ........

(5) நீண்ட ஓசைச் சொற்களாக ஆக்கி எழுதுங்கள்.

| கன் | - | கான் |
|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பல் | - | ........ | 7. மடி | - | ........ |
| 2. பனை | - | ........ | 8. கல் | - | ........ |
| 3. கொடு | - | ........ | 9. சுடு | - | ........ |
| 4. குடை | - | ........ | 10. மனம் | - | ........ |
| 5. குடம் | - | ........ | 11. விடு | - | ........ |
| 6. கலை | - | ........ | 12. எடு | - | ........ |

(6) கட்டமிடப்பட்டுள்ள இடங்களில் வரவேண்டிய உயிர் எழுத்துக்களை எழுதுங்கள்.


1. [ ] ன்பு 2. [ ] லமரம் 3. [ ] லங்கை 4. [ ] ட்டி

5. [ ] லகம் 6. [ ] ஞ்சல் 7. [ ] றும்பு 8. [ ] டு

9. [ ] ந்து 10. [ ] ளி 11. [ ] சை 12. [ ] வையார்

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* இக்கதையைப் பாத்திரமேற்று நடிக்க வழிப்படுத்துக.

# வானம் கறுத்தால் ......



வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்

மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்

பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்

கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்
காய்ச்சி நாமும் குடித்திடலாம்.

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை



5. S.P.C. - 050394

## பயிற்சி - 6

**(1) ஒத்து ஒலிக்கும் சொற்களை எழுதுங்கள்.**

| மண் | - | கண் |
|---|---|---|

(அ) பால் - ..........

(ஆ) வானம் - ..........

(இ) மரம் - ..........

(ஈ) பட்டம் - ..........

(உ) படி - ..........

**(2) சரியான சொல்லின் கீழ்க் கோடு கீறுங்கள்.**

(அ) வானம் கறுத்தால் (மழை, மலை) பெய்யும்.

(ஆ) பசு (புல், புள்) மேயும்.

(இ) மழை பெய்தால் (மன், மண்) குளிரும்.

(ஈ) மரத்தில் இருந்து (பலம், பழம்) விழுந்தது.

(உ) காட்டில் (மரங்கள், மறங்கள்) ஓங்கி வளர்ந்தன.

**(3) எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களை ஆக்குங்கள்.**

| ன, ம், வா | - | வானம் |
|---|---|---|

(அ) க, ரை, தி - ..........

(ஆ) ம், க, ங், சி - ..........

(இ) ள, நீ, இ, ர் - ..........

(ஈ) லை, ட, சா, பா - ..........

(உ) த, ம், பு, க, த் - ..........

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* பிரதேசத்தில் வழக்கிலுள்ள மழை பற்றிய பாடல் ஒன்றை மாணவர்கள் பாட வழிப்படுத்துக.

பாடம் - 7

# மரங்கள் வளர்ப்போம்.



அமீர், மோகன் இருவரும் நண்பரகள். அவர்கள் ஒரு மரத்தின் கீழ் இருந்து உரையாடுகின்றனர். சற்றுத் தூரத்தில் தென்னமரத்திலிருந்து 'தொப்' என்று ஒரு தேங்காய் விழுகிறது.

அமீர்:- மோகன், அது என்ன சத்தம்?

மோகன்:- அமீர், அது தேங்காய் விழுந்த சத்தம். அதோ அங்கே தெரியும் தென்னமரங்களைப் பார். தேங்காய்கள் பழுத்து விட்டன.

அமீர்:- பலா மரங்களைப் பார். பலாக் காய்கள் நிறையத் தொங்குகின்றன.

மோகன்:- இந்தப் பக்கம் திரும்பிப் பார்; பலவகை மாமரங்கள், பூவும் பிஞ்சும் காயுமாகக் காட்சி தருகின்றன.

அமீர்:- இத்தனை மரங்களுக்கும் கோடையில் நிறையத் தண்ணீர் ஊற்ற வேண்டுமே.

மோகன்:- அமீர், எங்கள் வீட்டில் ஒரு நாளும் தண்ணீருக்குப் பஞ்சம் இல்லை. அதோ கமுகுகள் உள்ள இடத்தைப் பார்.

அமீர்:- ஆமாம், அங்கே என்ன?

மோகன்:- அங்கேதான் வற்றாத கிணறு உண்டு. கிணற்றைச் சுற்றித்தான் கமுக மரங்கள் உள்ளன.

அமீர்:- கமுக மரங்களால் என்ன பிரயோசனம் மோகன்?

மோகன்:- குலை குலையாகப் பாக்குத் தருவன அவை.

அமீர் :- வேறு என்ன மரங்கள் உங்கள் காணியில் உள்ளன?

மோகன்:- கிணற்றுக்குக் கிழக்குப் பக்கம் பார். வாழைத்தோட்டமே உள்ளது.

அமீர்:- மோகன், இப்போது எனக்கு ஓர் உண்மை புரிகிறது. அது என்ன தெரியுமா? இத்தனை மரங்களும் நிற்பதால் நிறைய வருமானம் கிடைக்கும்.

மோகன்:- அமீர், அது மட்டுமல்ல, பழங்களையும் நாம் சாப்பிடலாம். அது எம் உடல் வளர்ச்சிக்கும் உதவும்.

அமீர்:- மோகன், எங்கள் காணியிலும் பயன்தரும் மரங்களை உண்டாக்க வேண்டும். இதற்கு நீ எனக்கு உதவுவாயா?

மோகன்:- நிச்சயமாக அமீர், நான் மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தவர் எல்லோருமே உதவுவோம். எங்கள் தோட்டத்தில் நிறைய மரக் கன்றுகள் உள்ளன. உங்கள் தோட்டத்தைப் பண்படுத்திய பின் அவைகளை அங்கு நாட்டலாம்.

அமீர்:- மிகவும் நன்றி மோகன்.

மரங்கள் வளர்ப்போம்; பயன் பல பெறுவோம்.

## பயிற்சி - 7

**(1) விடைகளை எழுதுங்கள்.**

(அ) ஐந்து பழங்களின் பெயர்களை எழுதுங்கள்.
(ஆ) ஐந்து பூக்களின் பெயர்களை எழுதுங்கள்.
(இ) ஐந்து வகையான கிழங்குகளின் பெயர்களை எழுதுங்கள்.
(ஈ) ஐந்து மரங்களின் பெயர்களை எழுதுங்கள்.
(உ) ஐந்து காய்கறிகளின் பெயர்களை எழுதுங்கள்.

**(2) கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்துப் பூரணப்படுத்தி எழுதுங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாதுகாத்தல்** | **நீர்** | **பசளை** | **கொத்த** | **நாட்ட** | **பாத்திகள்** |

1. நாங்கள் பயிர் செய்வதற்காக நிலத்தைக் .......... வேண்டும்.
2. சிறுசிறு .......... அமைக்க வேண்டும்.
3. பாத்தியில் கன்றுகளை .......... வேண்டும். தினமும் .......... ஊற்ற வேண்டும்.
4. பயிர்கள் வளர்ந்து வரும்போது .......... இட வேண்டும்.
5. பிராணிகள் சேதம் செய்யாமல் .......... வேண்டும்.

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* பாடசாலைத் தோட்டத்தில் மரங்களை நாட்டுவதற்கான ஒழுங்குகளைச் செய்து மாணவர்களை வழிப்படுத்துக.

# செய்து பார்ப்போம்.



பெரிய கண்ணாடிப் போத்தல் ஒன்றை மூடியுடன் எடுத்துக் கொள்ளுங்கள். போத்தலின் அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரை நிரப்புங்கள். கடல் நீல நிறம் தானே. நீல நிற மையை விட்டுத் தண்ணீரை நீல நிறமாக்குங்கள்.

போத்தலின் மிகுதிப் பகுதிக்குத் தேங்காய் எண்ணெய்யை நிரப்புங்கள். போத்தலை மூடியினால் இறுக மூடுங்கள். போத்தலைக் கிடையாக வைத்து உருட்டுங்கள். உருட்டும் போது மெதுவாக உருட்டுங்கள். போத்தலினுள் இருக்கும் நீல நிற நீர் கடல் அலை போல உருண்டு புரளுவதைக் காண்பீர்கள்.

இவ்வாறு செய்த பின்னர் போத்தலை நிமிர்த்துங்கள். நிமிர்த்திய போத்தலை வேகமாகக் குலுக்குங்கள். போத்தலுக்குள் புயல் கொந்தளிப்பு உண்டாகும்.

எப்படி என்றுதானே கேட்கின்றீர்கள்? நீரும் எண்ணெயும் சேராது என்று உங்களுக்குத் தெரியும். இரண்டும் தனித்தனியே இருக்கும். எண்ணெயை விட நீர் பாரமானது. நீர் போத்தலின் அடியில் தங்கும். நீங்கள் போத்தலை உருட்டும் போது நீல நிற நீர் எண்ணெய்ப் பரப்புக்கு மேலாக நகருகிறது.

வேகமாகக் குலுக்கும் போது குமிழிகளைக் கொண்ட அலைகள் போலக் கொந்தளிப்புத் தோற்றம் ஏற்படுகின்றது. ஆனால் நீரும் எண்ணெயும் எப்போதும் கலப்பதில்லை.

சிறிதுநேரம் அசைக்காமல் விடுங்கள். நீரும் எண்ணெய்யும் முன்புபோலத் தனித்தனியே பிரிந்திருப்பதைக் காண்பீர்கள்.

செய்து பார்ப்போம்; விளக்கம் பெறுவோம்.

## பயிற்சி - 8

1. ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக எழுதுங்கள்.
   - (அ) போத்தல் .போத்தல்கள்
   - (ஆ) மூடி .மூடிகள்
   - (இ) நிறம் .நிறங்கள்
   - (ஈ) குமிழி .குமிழிகள்
   - (உ) விளிம்பு .விளிம்புகள்

2. எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்.
   - (அ) ஒற்றுமை .வேற்றுமை...
   - (ஆ) தண்ணீர் ...வெண்ணீர் வெந்நீர்
   - (இ) உள்ளே .வெளியே...
   - (ஈ) தோற்றம் ..மறைவு.....
   - (உ) சுத்தம் .அசுத்தம்.....

3. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

தேங்காய்:- .உணவு. சமைப்பதற்கு. தேங்காய் உதவுகிறது

கடல் :- .கடலில். உப்பு. விளையும்...

காற்று :- .காற்று. சுவாசிக்க. உதவும்..

மை :- .மை. எழுதுவதற்கு. உதவும்

அலை :- .கடல். அலை. வேகமாக. வந்தது

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* இப்பரிசோதனை போன்று இலகுவான பரிசோதனைகளை மாணவர்கள் செய்து பார்க்க வழிப்படுத்துக



6. S.P.C. - 050394

# கடிதம்



18, புதிய பூங்கா வீதி,
கொழும்பு - 07.
01.01.2000.

அன்புள்ள தம்பிக்கு,

வணக்கம். நான் இங்கு நலமாக இருக்கிறேன். உங்கள் அனைவரினதும் நலமறிய ஆவலாக உள்ளேன்.

நான் விரைவில் வீட்டுக்கு வருவேன். அப்போது நீ கேட்ட எல்லாவற்றையும் மறக்காமல் வாங்கி வருவேன்.

தம்பீ! நீ நன்றாகப் படிக்கிறாயா? நன்றாகப் படிப்பாய் என்றே நம்புகிறேன். கவனத்துடன் படித்தால்தான் கல்வியில் முன்னேறலாம்.

அம்மா, அப்பா சொற்படி நட. பாடசாலையில் ஆசிரியர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடந்து கொள்.

ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து படி மாலையில் சிறிதுநேரம் விளையாடு. இரவில் அதிக நேரம் விழித்திருக்காதே.

உன்னுடைய பாடப் புத்தகங்களை மட்டும் படிப்பதோடு நின்றுவிடாதே. நூல் நிலையத்தில் இருக்கும் நல்ல புத்தகங்களைத் தேடிப் படி.

நல்ல நண்பர்களோடு பழகு. நேரத்தை வீணாக்கி விடாதே. எதையும் பிறகு செய்யலாம் என்று தள்ளிப் போடாதே.

என் அறிவுரைகளின்படி நடப்பாய் என்று நம்புகிறேன்.

இத்துடன் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

இப்படிக்கு,
அன்பு அக்கா,
செ. தமிழரசி.

கருத்துக்களை ஆக்கபூர்வமாகப் பரிமாறுவோம்.

## பயிற்சி - 9

1. நாங்கள் எவ்வெவ் வழிகளில் செய்திகளைப் பெறுகிறோம் என்பதை அட்டவணைப்படுத்துங்கள்.

   1. ...கணனி...
   2. ...தொலைபேசி...
   3. ...தொலைக்காட்சி...
   4. ...வானொலி...
   5. ...பத்திரிகை...
   6. ...ஈ-மெயில்...

2. பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுங்கள்.

   1. கத்தரி + செடி = ...கத்தரிச்செடி...
   2. மழை + காலம் = ...மழைக்காலம்...
   3. பாடம் + புத்தகம் = ...பாடப் புத்தகம்...
   4. தபால் + பெட்டி = ...தபால்ப்பெட்டி...
   5. வகுப்பு + ஆசிரியர் = ...வகுப்பாசிரியர்...
   6. நன்றாக + படி = ...நன்றாகப்படி...
   7. அறிவு + உரை = ...அறிவுரை...
   8. நூல் + நிலையம் = ...நூல் நிலையம்...
   9. பூ + செடி = ...பூஞ்செடி...
   10. கடல் + ஓரம் = ...கடலோரம்...

3. பின்வரும் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக் களைத் திருத்தி எழுதுங்கள்.

1. வனக்கம் ....வணக்கம்..........
2. மரக்காதே ....மறக்காதே..........
3. நண்று ....நன்று..........
4. கள்வி ....கல்வி..........
5. புத்தகங்கல் ....புத்தகங்கள்..........
6. நன்பண் ....நண்பன்..........
7. நேறம் ....நேரம்..........
8. விறைவாக ....விரைவாக..........
9. விலையாட்டு ....விளையாட்டு..........
10. ஆசிறியர் ....ஆசிரியர்..........

4. ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக்கி எழுதுங்கள்.


1. கடிதம் ....கடிதங்கள்..........
2. குதிரை ....குதிரைகள்..........
3. பாடசாலை ....பாடசாலைகள்..........
4. நண்பன் ....நண்பர்கள்..........
5. புத்தகம் ....புத்தகங்கள்..........

5. ஒரு கடித உறையைத் தயாரியுங்கள். உங்கள் நண்பருக்கு எழுதிய கடிதத்தை அவ்வுறையுள் இட்டு ஒட்டுங்கள். பெயர், முகவரி ஆகியவற்றை எழுதி அவரிடம் கொடுங்கள்.

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* முறையாகக் கடிதம் எழுத வழிப்படுத்துக.

# கிளித்தட்டு

அது ஒரு மாலைநேரம். மோகனும் அவனின் நண்பர்களும் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அமீர் துடுப்பெடுத்தாடினான். அவன் பந்தை அடித்தபோது அது பற்றைக்குள் விழுந்து விட்டது. எவ்வளவுதான் தேடிப் பார்த்தும் பந்து கிடைக்க வில்லை. நண்பர்கள் கவலையோடு மைதான ஓரத்தில் அமர்ந்து விட்டார்கள். அப்போது அங்கே மோகனின் மாமா வந்தார்.



மாமா:- என்ன பிள்ளைகளே! விளையாடவில்லையா? ஏன் எல்லோரும் கவலையோடு இருக்கிறீர்கள்?

மோகன்:- பந்து தொலைந்து போய்விட்டது மாமா. விளையாட வேறு பந்துகளும் இல்லை.

மாமா:- அதற்கென்ன வேறு ஏதாவது விளையாடலாமே!

அமீர்:- எங்களுக்கு வேறெந்த விளையாட்டும் தெரியாதே.

மாமா:- அப்படியா? நானொரு விளையாட்டுச் சொல்லித் தரட்டுமா?

நண்பர்:- சொல்லுங்கள் மாமா....... சொல்லுங்கள்.

மாமா:- நான் சொல்லித் தரப்போவது கிளித்தட்டு விளையாட்டு.

குமார்:- இது புதிய விளையாட்டா?

மாமா:- இல்லை, இது ஒரு பழைய விளையாட்டு. முன்பு கிராமங்களில் இதனை எல்லோரும் விரும்பி விளையாடுவார்கள். இப்போது விளையாடுவது குறைவு.

அன்ரனி:- எங்களுக்குச் சொல்லித் தாருங்கள் மாமா. நாங்கள் விளையாடுகிறோம்.

மாமா:- சொல்கிறேன்; கவனமாகக் கேளுங்கள். முதலில் மைதானத்தில் ஒரு செவ்வகம் கீற வேண்டும்.

வரதன்:- அதன் பிறகு என்ன செய்ய வேண்டும் மாமா?

மாமா:- இப்போது நீளப்பக்கமாக நடுவில் ஒரு கோடு கீற வேண்டும். அகலப் பக்கத்தில் சம அளவான இடைவெளியில் இரண்டு கோடுகள் கீற வேண்டும். இப்போது ஆறு கட்டங்கள் வரும்.

அமீர்:- எத்தனை பேர் விளையாடலாம் மாமா?

மாமா:- இரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாட வேண்டும். ஓர் அணியிலுள்ள ஆட்களின் எண்ணிக்கையின்படி கட்டங்கள் இருக்கலாம்.

வரதன்:- சற்று விளக்கமாகச் சொல்லுங்கள் மாமா.

மாமா:- நான் சொன்னது போல நான்கு பேர் விளையாடுவதானால் ஆறு கட்டங்கள் கீற வேண்டும். ஐந்து பேர் விளையாடுவதானால் எட்டுக் கட்டங்கள் கீற வேண்டும்.

அன்ரனி:- எப்படி மாமா விளையாடுவது?

மாமா:- இரண்டு அணிகளில் ஒன்று இறங்கும் அணி. மற்றது மறிக்கும் அணி.

மோகன்:- மறிப்பது எப்படி? இறங்குவது எப்படி?

மாமா:- சொல்கிறேன் கேளுங்கள். மறிக்கும் அணியின் தலைவனைக் கிளி என்பார்கள். இறங்குபவர்கள் காய் என்று சொல்லிக் கொண்டு முன்பக்கத்தில் இறங்குவார்கள். இறங்குபவர்களை ஒவ்வொரு கோட்டிலும் ஒவ்வொருவர் மறிப்பார்.

அமீர்:- கிளி என்ன செய்வார் மாமா?

மாமா:- இறங்குபவர்களைக் கிளியும் மறிப்பார். ஆனால் அவர் கரைக் கோடுகளிலும் நடுக்கோட்டிலும் ஓடி மறிக்க முடியும். இறங்குபவர்களைக் கிளி அடித்தால் அந்த அணி தோற்கும்.

அன்ரனி:- மறிப்பவர்கள் அடித்தாலும் அப்படித்தானா மாமா?



7. S.P.C. - 050394

மாமா:- அப்படி இல்லை. மறிப்பவர்களைத் தாண்டி அடுத்த கட்டத்துக்குள் ஒருவர் நுழையும் போது அவர் அடிபட்டால்தான் அணி தோற்கும்.

வரதன்:- இப்படி ஒருவர், மறிப்பவர் எல்லாரிடமும் தப்பித்து வெளியேறினால் அது வெற்றியா மாமா?

மாமா:- இல்லை. இப்படி ஒருவர் வெளியேறிய பிறகு, மீண்டும் அதேபோல் மேலேறி ஆரம்பித்த இடத்துக்கு வரவேண்டும். இப்படி வருபவரைப் 'பழம்' என்று அழைப்பர்.

மோகன்:- இவர்களையும் மறிப்பார்களா?


மாமா:- ஆமாம், இவர்களையும் மேலேறி வெளியேற விடாமல் திரும்பி நின்று மறிப்பார்கள். முதலில் கூறியது போலவே இப்போதும் கிளி அடித்தால் தோல்வியடைய வேண்டும். தடுப்பவரைத் தாண்டிப் போகும்போது அடி பட்டாலும் அந்த அணி தோற்கும். பழமும் காயும் ஒரே கட்டத்துக்குள் வந்தாலும் அணி தோற்கும்.

மோகன்:- இப்படி இல்லாமல் எல்லோரையும் கடந்து வெளியேறினால் அது வெற்றியா மாமா?

மாமா:- ஆம், இப்படி வெற்றி பெற்றால் அதே அணியே மீண்டும் இறங்கும். வெற்றி பெறாவிட்டால் மற்ற அணி இறங்கும்.

வரதன்:- இது நல்ல விளையாட்டு; செலவில்லாத விளையாட்டு; புத்தி சாதுரியமாக விளையாட வேண்டிய விளையாட்டு இது.

மாமா:- நல்லது. வாருங்கள் விளையாடிப் பார்க்கலாம். அப்போதுதான் தெளிவாக விளங்கும்.



விளையாட்டின் மூலம் ஒற்றுமையை வளர்ப்போம்.

## பயிற்சி - 10

1. **விடையை எழுதுங்கள்.**

(அ) எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் இரண்டு எழுதுங்கள்.

.................... ....................

(ஆ) எமது நாட்டில் விளையாடும் பிறநாட்டு விளையாட்டுக்கள் இரண்டு எழுதுங்கள்.

.................... ....................

(இ) உங்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் இடம் பெற்ற சுவட்டு நிகழ்ச்சிகள் இரண்டு எழுதுங்கள்.

.................... ....................

(ஈ) காற்பந்துப் போட்டியில் ஓர் அணியில் எத்தனை வீரர்கள் இடம் பெறுவர்.

........................................

(உ) பந்து பயன்படுத்தப்படாத விளையாட்டுக்கள் இரண்டு எழுதுங்கள்.

1. .................... 2. ....................

2. **எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி விளையாட்டுக்களின் பெயர்களை எழுதுங்கள்.**

1. த, ளி, த், கி, ட், டு ....................
2. ரி, க், கி, ட், கெ ....................
3. ப, ற், கா, ந், து ....................
4. நீ, ல், ச, ச் ....................
5. வ, ந், து, லை, ப், ப ....................

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* சர்வதேச விளையாட்டுப்போட்டிகளில் தங்கப்பதக்கங்கள் பெற்ற வீரர்களின் பெயர்களை அறிய வழிப்படுத்துக.
* மாணவர்களுக்குப் பொருத்தமான கிராமிய விளையாட்டுக்களை அறிமுகம் செய்க.

பாடம் – 11

# வீதி விதிகள்



பள்ளி செல்லும் பிள்ளையே
    பாடம் ஒன்று கற்றுக்கொள்.
நல்ல சாலை விதிகளை
    நன்கு மனத்துள் வைத்துக்கொள்.

நடக்கும் பாதை வழியிலே
    நாளும் நீயும் நடக்கணும்.
கடக்கும் இடத்தில் கவனமாய்க்
    கடந்து போகத் தெரியணும்.

சிரித்துப் பேசி மகிழ்ச்சியாய்ச்
சேர்ந்து நால்வர் சாலையை
மறித்துச் செல்லல் நல்லதோ?
மனத்தில் எண்ணிப் பாருங்கள்.

வளைவில் பிறரை முந்தினால்
வந்து நிற்கும் விபத்துமே
அளவிலாத வேகத்தால்
ஆபத்துண்டு தெரிந்துகொள்.

பாதையில் பந்து பம்பரம்
பட்டம் போன்ற விளையாட்டு
வேதனை தருமே யாருக்கும்
வேண்டாம் இவற்றைத் தவிர்த்திடு.

வீதி விதிகள் பேணி நிதம்
விரும்பும் இடமே போய்வரலாம்
ஏதினி வீதியில் விபத்துக்கள்
எல்லாம் தவிர்த்தே மகிழ்வோமே!

**கவிஞர். மா. பெரியசாமி**


வீதி விதிகளை அனுசரித்து நடப்போம்.
விபத்துக்களைத் தவிர்ப்போம்.

பயிற்சி - 11

**(1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. உங்கள் கிராமத்தில் உள்ள இரண்டு வீதிகளின் பெயர்களை எழுதுங்கள்.
2. வீதியில் செல்லும் வாகனங்கள் எவை?
3. வீதிகளில் நாம் எவற்றைச் செய்யலாகாது?
4. வீதிகளில் விபத்துக்கள் ஏற்படாமல் எவ்வாறு தவிர்க்கலாம்?
5. வீதி விதிகளினால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

**(2) பின்வரும் வீதி விதிகளுக்குரிய குறியீட்டுப் படங்களை வரையுங்கள்.**



1. பேருந்துத் தரிப்பிடம்.
2. இங்கே கடவுங்கள்.
3. புகையிரதக் கடவை.
4. முன்னால் பாடசாலை.
5. வைத்தியசாலை.

**(3) சொற்களுக்குப் பொருள் எழுதுங்கள்.**

1. சாலை - ....................
2. பள்ளிக்கூடம் - ....................
3. வேதனை - ....................
4. பேணுதல் - ....................
5. தவிர் - ....................

(4) இடைவெளிகளை நிரப்பி எழுதுங்கள்.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| பறந்தது | பறக்கிறது | பறக்கும் |
| வந்தது | வருகிறது | வரும் |
| குடித்தது | குடிக்கிறது | குடிக்கும் |
| ஓடியது | ஓடுகிறது | ஓடும். |
| கத்தியது | கத்துகிறது | கத்தும். |
| விழுந்தது | விழுகிறது. | விழும் |

(5) **பல்வேறு வாகனங்களின் படங்களைச் சேர்த்து வாகனப் புத்தகம் ஒன்றைத் தயாரியுங்கள்.**

நீரில் செல்பவை.

நிலத்தில் செல்பவை.

வானத்தில் செல்பவை.

(6) **பொருள் தரும் எழுத்துக்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| வா | மை | ங | ல |
| ந் | ஞா | கை | தீ |
| போ | வை | பை | தா |


வா மை கை தீ

போ வை பை தா

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* அண்மையில் உள்ள வீதிக்கு மாணவர்களை அழைத்துச் சென்று வாகனங்கள், வீதிவிதிகள் என்பவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.

பாடம் - 12

# செய்தித்தாள்



உலகில் நிமிடத்திற்கு நிமிடம் பல நிகழ்வுகள், சம்பவங்கள் நிகழ்கின்றன. எல்லாவற்றையும் நாம் அறிய முடிவதில்லை. ஆயினும் முக்கிய நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவைகளை எப்படி அறிகிறோம்? வானொலியில் கேட்கிறோம்; தொலைக் காட்சியில் பார்க்கிறோம்; கேட்கிறோம்; செய்தித்தாள் களில் வாசிக்கிறோம்.

நாம் முக்கியமான செய்திகளை அறிந்து கொள்வதற்கு செய்தித்தாள்கள் உதவுகின்றன. செய்தித்தாள்கள் எழுத்து வடிவில் செய்திகளையும், தகவல்களையும் தருகின்றன.

செய்தித்தாளை 'செய்திப் பத்திரிகை' என்றும் கூறுவர். தினமும் வெளிவரும் செய்தித்தாளை தினசரி, நாளிதழ் என்றும் கூறலாம். வாரம் ஒருமுறை வெளிவருவதை வாரப்பத்திரிகை, வார இதழ் என்றும் கூறலாம்.

செய்தித்தாள்கள் செய்திகளையும், தகவல்களையும் படங்களுடன் தருகின்றன. செய்தித்தாள்களில் செய்திகளைத் தவிர கட்டுரைகளும் வெளி வருகின்றன.

வாரப் பத்திரிகைகளில் செய்திகளோடு கட்டுரைகள், கதைகள், கவிதைகள் போன்றவையும் இடம்பெறுகின்றன. சிறுவர்களுக்கான தனிப் பகுதிகளும் பத்திரிகைகளில் உள்ளன.

அறிவை வளர்த்துக் கொள்ளச் செய்தித்தாள்கள் உதவுகின்றன. புதிய புதிய விடயங்களை நாம் அதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். மாணவர்களாகிய நாம் பத்திரிகைகள் வாசித்துப் பயன்பெறுவோம்.

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்.

## பயிற்சி - 13

1. **விடை எழுதுங்கள்.**
   - (அ) உங்களுக்குத் தெரிந்த சில செய்தித்தாள்களின் பெயர்களை எழுதுங்கள்.
   - (ஆ) செய்தித்தாள்களின் மூலம் நாங்கள் எவற்றை அறிந்து கொள்ளலாம்?
   - (இ) செய்திப் பத்திரிகையை வேறு எப்பெயர்களால் அழைப்பர்?
   - (ஈ) வாரம் ஒருமுறை வெளிவரும் பத்திரிகைகளை எப் பெயர்களால் அழைப்பர்?

2. **கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 அ | க் | 2 கா |
| ப் | ▨ | க் |
| 3 பா | ட | 4 ம் |

**மேலிருந்து கீழ்**

1. தந்தையை இப்படியும் அழைப்பர்.
2. கறுப்பு நிறப் பறவை.

**இடமிருந்து வலம்**

1. மூத்த சகோதரி
3. பாடசாலையில் படிப்பது

குறிப்பு:-
- ✱ இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
- ✱ மாணவர்கள் ஒவ்வொருவரும் விரும்பிய ஒரு படம் வரைந்து, அதில் அவரவர் பெயர், பாடசாலைப் பெயர், முகவரி ஆகியவற்றை எழுதி, பத்திரிகை ஒன்றின் சிறுவர் பகுதிக்கு அனுப்ப வழிப்படுத்துக.
- ✱ உங்கள் வகுப்பு மாணவர்களின் நிலைக்கேற்ப ஒரு சுவர்ப் பத்திரிகையைத் தயாரித்துக் கொள்க.

# சாதனை படைத்த இளைஞன்

அது ஒரு மார்கழி மாதம். நள்ளிரவு நேரம். ஐரோப்பா எங்கும் கடுங்குளிர். மனிதர்கள் எல்லோரும் குளிரால் முடங்கிக் கிடந்தனர். அந்த இளைஞனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. வீட்டு மேல்மாடி அறையில் ஏதோ செய்து கொண்டிருந்தான்.

வீட்டில் எல்லோரும் நல்ல உறக்கத்தில் இருந்தனர். அந்த இளைஞன் மெதுவாகக் கீழே இறங்கி வந்தான். உறங்கிக் கொண்டிருக்கும் தாயருகே சென்றான். மெதுவாக அவரைத் தட்டி எழுப்பினான்.



"என்ன மகனே நீ இன்னும் நித்திரை கொள்ள வில்லையா? தொந்தரவு செய்யாமல் போய் நித்திரை கொள். உன் அப்பா விழித்தால் உன்னை ஏசுவார்" என்று அம்மா மெதுவாக மகனிடம் கூறினார்.

"அம்மா .... அம்மா தயவு செய்து என்னோடு மாடி அறைக்கு வாருங்கள். ஓர் அதிசயம் காட்டுகிறேன்" என்று அவன் தாயைக் கெஞ்சி அழைத்தான். தாயாரால் அவனது வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. மெதுவாக அவனோடு மாடியறைக்குச் சென்றார்.

தாயாரை அறையின் ஒரு மூலையில் அமரச் செய்தான். தாயின் அருகே ஒரு மேசையை வைத்தான். அதில் ஏதோ கருவிகளை வைத்து மூடினான். பின் அவன் ஒரு மூலையில் போய் நின்றான். கையில் ஒரு பொருளை வைத்திருந்தான்.

"அம்மா! கவனமாக்க கேளுங்கள்" என்று கூறித் தனது கையில் வைத்திருந்த பொருளை அழுத்தினான். என்ன ஆச்சரியம். அறையின் இன்னொரு மூலையில் மணி ஒலித்தது. இடையிலே எந்தக் கம்பித் தொடர்பும் இல்லை. தாயாருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மகனின் விடாமுயற்சி வெற்றி பெற்றது கண்டு மகனைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.

"என் ..... செல்ல மகனே!.... எனக்கு உன் கண்டுபிடிப்பால் மட்டில்லா மகிழ்ச்சி. விடிந்ததும் உன் அப்பாவிடம் சொல்வோம்" என்றார் அம்மா.

மறுநாள் அவனின் கண்டுபிடிப்பைப் பற்றி அப்பாவிடம் அம்மா சொன்னார்.

"நமது மகன் கம்பியில்லாமல் தந்தியனுப்பும் முறையைக் கண்டுபிடித்துவிட்டான். நேற்றிரவு எனக்குச் செய்து காட்டினான்" என்றார்.

அதற்கு அவனது அப்பா, "உனக்குப் பைத்தியமா? பிதற்றாதே" என்றார். ஆம் அவர் அதை நம்பவில்லை. இரண்டு தடவைகள் செய்து காட்டியும் நம்பவே இல்லை. ஒரு வருடத்திற்குப் பிறகு, ஒருநாள் ஒரு மலையில் இருந்து இன்னொரு மலைக்கு கம்பியில்லாமல் ஒலியை அனுப்பினான் அந்த இளைஞன். அப்போது தான் அவனின் தந்தை நம்பினார். பின்னர் அந்த இளைஞனை உலகமே வியந்தது. அந்த இளைஞன் யார் தெரியுமா? அவர்தான் மார்க்கோனி. கம்பியில்லாத் தந்தி, வானொலி ஆகியவற்றைக் கண்டு பிடித்தவர்.

மார்க்கோனி வானொலியைக் கண்டுபிடித்ததால் உலகப் புகழ் பெற்றார். இன்று வானொலியைத் தெரியாதவர்களே உலகில் இல்லை.

வானொலி மூலம் செய்திகளை உடனுக்குடன் அறியலாம். செய்திகள், பாடல்கள், நாடகங்கள் ஆகியவற்றைக் கேட்கலாம். வானொலியில் கல்வி நிகழ்ச்சிகளையும், சிறுவர் நிகழ்ச்சிகளையும் கேட்கலாம்.

போக்குவரத்து வசதி குறைந்த கிராமங்களுக்குக் கூட வானொலி செய்திகளை எடுத்துச் செல்கிறது. அதனால் வானொலியைப் 'பொதுமக்களின் நண்பன்' என்பர்.

வானொலி என்றவுடன் மார்க்கோனியின் பெயரும் நினைவுக்கு வரும்.

| முயற்சி செய்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. |
|---|

**பயிற்சி - 13**

**(1) வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

(அ) வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்?

(ஆ) அந்த இளைஞனுக்கு ஆதரவாக இருந்தவர் யார்?

(இ) மார்க்கோனியின் கண்டுபிடிப்புக்கள் எவை?

**(2) பின்வரும் சொற்களின் பொருளை எழுதுங்கள்.**

நள்ளிரவு, உறக்கம், இளைஞன், கெஞ்சுதல், தொந்தரவு, அழைத்தல், கருவி, ஆச்சரியம், ஒலி, மட்டில்லாத

மன்றாடுதல்

**(3) எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.**

(அ) மகன் ........ மகள் ........

(ஆ) தந்தை ........ தாய் ........

(இ) சிறுவன் ........ சிறுமி ........

(ஈ) பாட்டன் ........ பாட்டி ........

(உ) சகோதரன் ........ சகோதரி ........

(ஊ) மாணவன் ........ மாணவி ........

**(4) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.**

1. நித்திரை: ..............................
2. மூலை: ..............................
3. மணி: ..............................
4. நண்பன்: ..............................
5. வானொலி: ..............................
6. மலை: ..............................

**(5) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய்ச் சொற்களை எழுதுங்கள்.**

1. கிளி பறந்தது.
2. மழை பெய்தது.
3. கமால் பாடசாலைக்குப் போனான்.
4. அம்மா சோறு சமைத்தார்.
5. மாணவர் பாட்டுப் பாடினர்.

**(6) வேறுபட்ட சொல்லைக் கண்டுபிடித்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

1. வாசித்தான், படித்தான், வரைந்தான், குடித்தான்
2. வந்தது, போனது, இருந்தான், பறந்தது
3. சமைத்தாள், சாப்பிட்டான், வெட்டினாள், கழுவினாள்.
4. வருகிறது, ஓடுகிறது, நடக்கிறது, பாய்ந்தது
5. வந்தார், போவார், இருந்தார், பேசினார்

**(7) பின்வரும் வாக்கியங்களில் உள்ள பயனிலைச் சொற்களை எழுதுங்கள்.**

1. அவனுக்குத் தூக்கம் வந்தது.
2. அவன் கீழே இறங்கி வந்தான்.
3. தாயார் மாடியறைக்குச் சென்றார்.
4. சிறுவர் நிகழ்ச்சிகளை வானொலியில் கேட்கலாம்.
5. தாயார் மகிழ்ச்சி அடைந்தார்.

(8) **"வானொலி"** என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* வானொலியில் செவிமடுத்த கதையொன்றைக் கூற மாணவர்களை வழிநடத்துக.

பாடம் - 14

# நலமாக வாழ்வோம்.



நாம் நீண்ட காலம் வாழ வேண்டும். நோய்கள் இன்றி நலமாக வாழவேண்டும். அப்படி வாழ்வதற்கு நாம் என்ன செய்யலாம்?

நாம் சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். நிறையப் பழங்கள், கீரைவகைகள், காய்கறிகள் உண்பது நல்லது. தினமும் காலையில் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். மாலை நேரங்களில் ஓடி ஆடி விளையாட வேண்டும். நமது உடலுக்குப் போதுமான ஓய்வு அவசியம். உரிய நேரத்தில் நித்திரை செய்தல் வேண்டும்.

நாம் நமது உடலைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். கண்களைப் பாதுகாக்கச் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டும். குறைவான வெளிச்சத்தில் எதையும் வாசிக்கக் கூடாது. ஓடும் வாகனத்திலிருந்தும் வாசிக்கக் கூடாது. அதிக நேரம் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது. இதுபோல நமது உடலின் எல்லா உறுப்புக்களையும் பாதுகாக்க வேண்டும்.

நாம் எல்லோரிடமும் அன்பாகப் பழக வேண்டும். ஒற்றுமையாக வாழவேண்டும். எந்நேரமும் மகிழ்ச்சியாக இருக்கப் பழக வேண்டும். நல்ல பொழுதுபோக்குகளில் ஈடுபட வேண்டும். இவ்வாறான நல்ல பழக்கங்களும் ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியமானவை.

நாம் ஆரோக்கியமாக வாழ இன்னும் பல வழிகள் உள்ளன. அவைகளைப் பற்றி நமது பெற்றோரிடமும் ஆசிரியரிடமும் கேட்டறிவோம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**பயிற்சி - 14**

**(1) நாம் நலமாக வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்க வழக்கங்கள் சிலவற்றை எழுதுங்கள்.**

1. ..................................................
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................

(2) தரப்பட்டிருக்கும் சொற்களுக்கேற்ற முடிக்குஞ் சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்.

| |
|---|
| சிரித்தாள், அழைத்தார், வந்தார், விழுந்தாள், விளையாடினோம், வந்தேன், ஓடினார்கள் |

(அ) நாங்கள் ........ விளையாடினோம் ........

(ஆ) நான் ........ வந்தேன் ........

(இ) அவள் ........ விழுந்தாள் ........

(ஈ) அம்மா ........ அழைத்தார் ........

(உ) கமலா ........ சிரித்தாள் ........

(ஊ) பிள்ளைகள் ........ ஓடினார்கள் ........

(எ) மாமா ........ வந்தார் ........

(3) பின்வரும் சொற்களின் கருத்தைத் தரும் வேறு இரு சொற்களை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகாரம் | – | உணவு | சாப்பாடு |
| (அ) | அரசன் | – | வேந்தன் | மன்னன் |
| (ஆ) | சோறு | – | அமுது | சாதம் |
| (இ) | வீதி | – | தெரு | சாலை |
| (ஈ) | வனம் | – | காடு | அடவி |
| (உ) | அகம் | – | வீடு | இல்லம் |

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* சுகாதாரச் செய்திகளைத் தாங்கிய சுவரொட்டிகள் சிலவற்றை மாணவர் அவதானிக்க வழிப்படுத்துக.

# பழமொழிகள்

1. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. ஆழம் அறியாமல் காலை விடாதே.
3. இக்கரைக்கு அக்கரை பச்சை.
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
5. எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடாதே.
6. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
7. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?
8. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
9. சிறுதுளி பெருவெள்ளம்.
10. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
11. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
12. யானைக்கும் அடி சறுக்கும்.
13. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
14. குரைக்கிற நாய் கடிக்காது.
15. விளையும் பயிரை முளையிலே தெரியும்.

## பயிற்சி - 15

**(1) சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழியாக்குங்கள்.**

(அ) பச்சை / இக்கரைக்கு / அக்கரை

(ஆ) கொள் / காற்றுள்ள / தூற்றிக் / போதே

(இ) மட்டும் / பழக்கம் / சுடுகாடு / தொட்டில்

(ஈ) உதவாது / ஏட்டுச் / கறிக்கு / சுரைக்காய்

(உ) தெரியும் / பயிரை / முளையிலே / விளையும்

**(2) கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.**

(அ) பூவோடு சேர்ந்த ............ மணக்கும்.

(ஆ) எட்டாக் கனிக்குக் ............ விடாதே.

(இ) உப்பிட்ட வரை ............ நினை.

(ஈ) ஆழம் அறியாமல் ............ விடாதே.

(உ) நோயற்ற வாழ்வே ............ செல்வம்.

**(3) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.**

(அ) பச்சை - ..............

(ஆ) ஐம்பது - ..............


(இ) யானை - ..............

(ஈ) உப்பு - ..............

(உ) வெள்ளம் - ..............

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* பழமொழிகள் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றை மாணவர் தயாரிக்க வழிப்படுத்துக.

# வீட்டுத் தோட்டம்



தாத்தா வைத்த தென்னையுமே
தலையில் இளநீர் தருகிறது.

பாட்டி வைத்த வாழைமரம்
பாங்காய்ப் பழங்கள் தருகிறது.

அப்பா வைத்த மாமரமும்
எப்போதும் பழம் தருகிறது.

அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது.

மாமா நட்ட மிளகாயும்
மணி மணியாகக் காய்க்கிறது.

அண்ணன் வைத்த மாதுளையோ
கிண்ணம் போலப் பழுக்கிறது.

அக்கா நட்ட கத்தரியோ
அடுக்கு அடுக்காய்க் காய்க்கிறது.

சின்னஞ் சிறுவர் நாங்களுமே
செடிகள் நட்டு வளர்ப்போமே.

**வீட்டுத் தோட்டத்தில் பயிர்கள் வளர்த்துப் பயன் பெறுவோம்.**

**பயிற்சி - 16**

**(1) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. வீட்டுத் தோட்டத்தில் மிளகாய் நட்டவர் யார்?
2. தென்னை தருவது என்ன?
3. இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள பழமரங்கள் எவை?
4. இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள செடிகள் எவை?
5. உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நீங்கள் நாட்ட விரும்புவன எவை?

**(2) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிகளை நிரப்புங்கள்.**

| |
|---|
| அழகான, வேகமாக, சத்துள்ள, |
| பெரிய, ஆழமாக, உயரமாக |

1. யானை ஒரு ...பெரிய.... மிருகம்.
2. அப்பா கிணற்றை ...ஆழமாக.த் தோண்டினார்.
3. வசந்தன் ....வேகமாக. ஓடினான்.
4. தென்னமரம் .உ...யரமாக வளரும்.
5. நாம் ..சத்துள்ள.. உணவுகளை உண்போம்.
6. மயில் ...அழகான... பறவை.


**(3) பொருத்தமான சொற்களை இடைவெளிகளில் வைத்து நிரப்புங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| (அ) | தென்னை | – | இளநீர் |
| | மாதுளை | – | .பழம். |
| (ஆ) | கத்தரி | – | செடி |
| | பூசனி | – | .கொடி |
| (இ) | வாழை | – | இலை |
| | பனை | – | .ஓலை |
| (ஈ) | மா | – | கன்று |
| | வாழை | – | குட்டி |

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* பழங்களின் படங்களைச் சேகரித்து "பழங்கள்" எனும் பெயரில் புத்தகமொன்றை மாணவர்கள் தயாரிக்க வழிப்படுத்துக.
* வீட்டுத் தோட்டம் ஒன்றைப் பார்வையிட்டு அதைப் பற்றிய கருத்துக்களைக் கூற வழிப்படுத்துக.


# முயற்சி வெல்லும்

ஒரு காட்டிலே நரி ஒன்று வசித்து வந்தது. ஒருநாள் வழக்கம் போல அது உணவு தேடிச் சென்றது. அன்று எந்த உணவும் கிடைக்கவில்லை. பசியும் தாகமும் நரியை வாட்டின. நரி அங்கும் இங்குமாக அலைந்தது. கடைசியாக ஒரு திராட்சைத் தோட்டத்திற்கு வந்தது. அங்கு நன்றாகப் பழுத்த திராட்சைப் பழங்கள் குலைகுலையாகப் பந்தலில் தொங்கின. நரி அண்ணாந்து பார்த்தது. பழுத்த திராட்சைப் பழங்களைக் கண்டது.



ஆவலுடன் பழங்களைப் பறிப்பதற்கு முயற்சி செய்தது. பழங்கள் எட்டவில்லை. பழங்களைப் பறிப்பதற்காக எட்டி, எட்டிப் பாய்ந்தது. அப்போதும் பழங்கள் எட்டவில்லை. நரி விட்டுவிடவில்லை. வேகமாக ஓடி வந்து துள்ளிப் பாய்ந்தது.

பழக்குலைகளுக்குக் கிட்டப் போக முடிந்தது. ஆனால் பறிக்க முடியவில்லை. நரி மனம் தளர்ந்தது. பசி ஒரு புறம் நரியை வாட்டியது. மனவருத்தத்துடன் காட்டுக்கே திரும்பி விட யோசித்தது. அப்போது அவ்வழியே மான் ஒன்று வந்தது. அது, துக்கத்துடன் வரும் நரியைக் கண்டது. "என்ன நரியாரே, கவலையுடன் வருகிறீர்கள்?" "என்ன நடந்தது?" என்று கேட்டது.




"அதோ பாருங்கள். அந்தப் பந்தலில் எவ்வளவு திராட்சைப் பழங்கள் இருக்கின்றன. என்னால் பறித்துச் சாப்பிட முடியவில்லையே..." என்று நரி கூறியது. "ஏன் பறிக்க முடியவில்லை?" என்று மான் கேட்டது. "எட்டி எட்டிப் பாய்ந்தேன்; துள்ளித் துள்ளிப் பாய்ந்தேன்; சிறிது தூரத்திலிருந்து ஓடி வந்து பாய்ந்தேன். ஆனால் பழங்கள் எட்டவே இல்லை. சீ...சீ... இந்தப் பழம் புளிக்கும் என்று வந்துவிட்டேன்" என்று சோகமாகக் கூறியது நரி. "என்ன நரியாரே, உங்களுக்கு எட்டாத பழம் புளிக்குமா? நீங்கள் வேறு முயற்சிகள் செய்யவில்லையா?" என்று மான் கேட்டது.

"வேறு என்னதான் செய்வது?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டது நரி.

"அதோ பாருங்கள், யாரோ வெட்டிப் போட்ட ஒரு மரக்குற்றி. அதைக் கொண்டு வந்து, அதில் ஏறிப் பறித்திருக்கலாம்" என்று மான் கூறியது. மான் காட்டிய இடத்தில் ஒரு மரக்குற்றி கிடந்தது. தனக்கு இந்த யோசனை முன்பு வரவில்லையே என்று நரி நினைத்தது.

"மானாரே, நல்ல யோசனை ஒன்று சொன்னீர்கள். மிகவும் நன்றி" என்றது நரி.

"நான் அவசரமாகப் போக வேண்டும். வருகிறேன்" என்று கூறி மான் போய் விட்டது.



நரி மரக்குற்றியைப் பந்தலுக்கு அருகில் கொண்டு வந்தது. அதன் மீது ஏறியது. என்ன மகிழ்ச்சி! நரியின் கையில் குலைகுலையாகத் திராட்சைப் பழங்கள். நரி நன்றியுடன் மானை நினைத்துக் கொண்டது. நரியின் பசியும் தாகமும் தீர்ந்தன. நரி மிகுந்த மகிழ்ச்சியுடன் காட்டிற்குள் சென்றது.

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

## பயிற்சி - 17

(1) **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. நரி ஏன் அங்கும் இங்குமாக அலைந்தது?
2. அது என்ன பழங்களைக் கண்டது?
3. அது பழத்தைப் பறிக்க என்ன செய்தது?
4. பழத்தைப் பறிக்க முடியாதபோது நரி என்ன கூறியது?
5. பழத்தைப் பறிக்க நரிக்கு உதவி செய்தது யார்?

(2) **பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்களை எழுதுங்கள்.**

(அ) பாய்ந்துபாய்ந்து - ..................

(ஆ) துள்ளித்துள்ளி - ..................

(இ) சிறுசிறு - ..................

(ஈ) மெல்லமெல்ல - ..................

(உ) குலைகுலையாக - ..................

(ஊ) கொத்துக்கொத்தாக - ..................

(எ) ஓடிஓடி - ..................

(ஏ) நிரைநிரையாக - ..................

(3) அடுத்து வரும் தொடருக்குப் பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பசி | – உணவு; | தாகம் | – | நீர் |
| 2. | வெயில் | – சூடு; | மழை | – | குளிர்... |
| 3. | இரவு | – இருள்; | பகல் | – | ..வெளிச்சம் |
| 4. | நாய் | – மிருகம்; | காகம் | – | ..பறவை |
| 5. | பாகற்காய் | – கசப்பு; | கரும்பு | – | ..இனிப்பு |

(4) பின்வரும் சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுங்கள்.

| | |
|---|---|
| பழம் | – பழங்கள் |

1. மரம் – ..மரங்கள்....
2. காகம் – ..காகங்கள்....
3. குளம் – ..குளங்கள்...
4. பாடம் – ..பாடங்கள்...
5. குடம் – ..குடங்கள்...
6. சிங்கம் – ..சிங்கங்கள்

(5) "பழங்கள்" என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* "முயற்சி வெற்றியளிக்கும்" என்ற கருத்தை வலியுறுத்தும் வண்ணம் கதைகளை ஆக்கி மாணவர்களுக்கு வழங்குக.

# விடுகதைகள்

1. கண்ணுக்குத் தெரியாதவன். உயிருக்கு உகந்தவன். அவன் யார்?
2. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான். அவன் யார்?
3. சுற்றுவது தெரியாது, ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான். அவன் யார்?
4. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?
5. கழற்றிய சட்டையைத் திரும்பப் போட மாட்டான். அவன் யார்?
6. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட நாள் ஆயுள். அவன் யார்?
7. தாவுவதும் அவனே தாக்குவதும் அவனே. அவன் யார்?
8. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
9. வாய் இல்லை; வார்த்தைகள் சொல்வான்; உயிர் இல்லை; ஊருக்குப் பறப்பான்; கால் இல்லை வீட்டுக்கு வருவான் அவன் யார்?
10. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும்; வாசனை தந்து நெஞ்சிலே நிறையும். அது என்ன?
11. உரசினாலே உயிரை விடுவான். அவன் யார்?
12. அடர்ந்த காட்டிற்குள் நுழைவான். அலைந்து திரிந்து அழகுபடுத்துவான். அவன் யார்?

13. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?

14. அடித்தால் விலகாது. அணைத்தால் நிற்காது. அது என்ன?

15. பழகினால் மறக்காதவன் பயந்தோரை விடாதவன். அவன் யார்?

## பயிற்சி - 18

### (1) எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களாக்குங்கள்.

1. றி தெ யா து - ..தெரியாது..........
2. பு ப் ரு நெ - ..நெருப்பு..........
3. ன் வா ய் மே - ..மேய்வான்..........
4. ய தை ல் பு - ..புதையல்..........
5. ளி மா கை - ..மாளிகை..........

### (2) பன்மைச் சொற்களை ஒருமைச் சொற்களாக்குங்கள்.

1. வீடுகள் - ..வீடு..............
2. கால்கள் - ..கால்..............
3. காடுகள் - ..காடு..............
4. நாட்கள் - ..நாள்..............
5. நாய்கள் - ..நாய்..............

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* விடுகதைகள் கொண்ட புத்தகம் ஒன்றை ஆக்க மாணவர்களை வழிப்படுத்துக.

# சிறுவர் தினம்




அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை. அப்பாவும், அம்மாவும் என்னைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர். பாடசாலை வாசலில் **"சிறுவர் தின விழா"** என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. வாசலில் நின்ற ஆசிரியர்கள் எங்களை இன்முகத்துடன் வரவேற்றனர்.

மைதானத்தின் நடுவில் ஒரு அழகிய மேடை அமைக்கப் பட்டிருந்தது. சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் போன்ற பல நிறங்களில் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன.

மாணவர்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் நாங்கள் அமர்ந்தோம். பெற்றோர்களுக்கெனத் தனியாக இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவற்றில் மாணவர் களின் பெற்றோர்கள் அமர்ந்திருந்தனர்.

சிறிது நேரம் சென்றதும் அதிபரும், பெரியவர் ஒருவரும் மேடையை நோக்கி வந்தனர். நாங்கள் அனைவரும் எழுந்து நின்று வணக்கம் கூறினோம். அதிபரும் பெரியவரும் மேடையில் அமர்ந்தனர்.

விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. பால் குடித்தல், பலூன் உடைத்தல், நீரைக் கைகளால் அள்ளிப் போத்தலை நிரப்புதல், பந்தைத் தட்டித்தட்டி ஓடுதல், வார் ஓட்டம், சங்கீதக் கதிரை போன்ற விளையாட்டுக்களை விளையாடினோம்.

எங்கள் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. எனது நண்பர்கள் சிலர் மேடையில் ஏறிப் பாடினார்கள். வேறு சிலர் நடனம் ஆடினார்கள்.

பின்னர் அதிபர் பேசினார். ஆண்டு தோறும் உலகெங்கும் **"சிறுவர் தினம்"** கொண்டாடப்படுவதன் அவசியம் பற்றிக் கூறினார்.

அடுத்து பெரியவர் **"சிறுவர் உரிமைகள்"** பற்றிப் பேசினார். "பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். பிள்ளைகளை யாரும் துன்புறுத்தக் கூடாது. பிள்ளைகளைக்

கல்வி கற்க விடாது வேலைக்கு அமர்த்துவது குற்றமாகும்" எனப் பேசினார். அவரது பேச்சு எமக்கு உற்சாகத்தைத் தந்தது.

அதிபரும் பெரியவரும் மேடையை விட்டு இறங்கினர். நாம் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்தனர். அப்போது நாம் வட்ட வடிவமாக மைதானத்தில் நின்றோம். அவர்கள் இருவரும் எம் ஒவ்வொருவர் அருகிலும் வந்து "நன்றாகப் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்" எனக் கைகுலுக்கி வாழ்த்தினர்.

படங்கள் நிறைந்த புத்தகம், பந்து, பொம்மை, பேனா, பென்சில், கொப்பி போன்ற பரிசுகளை எங்கள் ஒவ்வொருவருக்கும் தந்தனர்.

எமக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம். ஒவ்வொரு வருக்கும் தின்பண்டங்களும் கிடைத்தன. அவற்றை உண்டு மகிழ்ந்தோம். இவற்றைப் பார்த்துப் பெற்றோர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கல்வி கற்பது சிறுவர்களின் பிறப்புரிமை.

## பயிற்சி - 19

(1) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குங்கள்.

(அ) அழகிய / அமைக்கப்பட்டிருந்தது / அங்கே / மேடை

(ஆ) பாடசாலைக்கு / அழைத்துச் / என்னைப் / சென்றனர்

(இ) ஆரம்பமாகின / போட்டிகள் / விளையாட்டுப்

(ஈ) மகிழ்ச்சி / எங்கள் / ஒரே / எல்லோருக்கும்

(உ) அனைவரும் / பிள்ளைகள் / கற்க / கல்வி / வேண்டும்

(2) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் ஆக்குங்கள்.

(அ) மைதானம் - ........................

(ஆ) பெற்றோர் - ........................

(இ) பலூன்கள் - ........................

(ஈ) ஆசிரியர் - ........................

(உ) பெரியவர் - ........................

(3) **"சிறுவர் தினம்"** பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* உலக சிறுவர் தினத்தன்று பாடசாலையில் சிறுவர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்க.

# மழை



நீல வானம் இருண்டது
நெடிய மேகம் திரண்டது
மேளம் போல இடித்தது
மின்னல் வானில் வெடித்தது

சீறிக் காற்றும் எழுந்தது
சேர்ந்து மழையும் பொழிந்தது
பாறி மரமும் வீழ்ந்தது
பாய்ந்து வெள்ளம் வழிந்தது

ஆறாய் நீரும் பாய்ந்தது
அருவியாகப் பரந்தது
சேறாய் வயலும் நிறைந்தது
செந்நெல் பூத்துச் சிரித்தது

வரண்ட செடிகள் தழைத்தன
வளமும் வாழ்வும் செழிந்தன
இருண்ட வாழ்வு அகன்றது
எல்லோர் மனமுங் குளிர்ந்தது

## பயிற்சி - 20

**(1) வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. மழை பெய்வதற்கு முன் வானம் எவ்வாறு இருந்தது?
2. வானம் எவ்வாறு முழங்கியது?
3. பெரிய மரம் விழுந்ததற்குக் காரணம் என்ன?
4. மழைநீர் எவ்வாறு ஓடியது?
5. மழையினால் ஏற்படும் பயன்கள் யாவை?

**(2) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்களை எழுதுங்கள்.**

1. திரண்டது – ................
2. பொழிந்தது – ................
3. செழிப்பு – ................
4. வரட்சி – ................
5. இருள் – ................

**(3) பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வாக்கியங்களை எழுதுங்கள்.**

(அ) நீலம் – ........................
நீளம் – ........................

(ஆ) மனம் – ........................
மணம் – ........................

(இ) வலம் – ........................
வளம் – ........................

(4) பின்வரும் சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுங்கள்.

| | ஒருமை | | பன்மை |
|---|---|---|---|
| | கை | – | கைகள் |
| (அ) | அருவி | – | ....... அருவிகள் |
| (ஆ) | கனி | – | ....... கனிகள் |
| (இ) | கதிரை | – | ....... கதிரைகள் |
| (ஈ) | மேசை | – | ....... மேசைகள் |
| (உ) | பூச்சாடி | – | ....... பூச்சாடிகள் |
| (ஊ) | பாடசாலை | – | ....... பாடசாலைகள் |

(5) ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்.

(அ) குன்று - ....மலை.........

(ஆ) குளம் - ....பொய்கை.........

(இ) வயல் - ....கழனி.........

(ஈ) கடல் - ....ஆழி/சமுத்திரம்.........

(உ) செவி - ....காது.........

(6) மழையைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* மழை தொடர்பான வேறு பாடல்களை மாணவர்களுக்கு வழங்கிப் பாட வழிப் படுத்துக.

# தன் கையே தனக்கு உதவி



ஒரு வயலின் ஓரத்தில் பெரிய மரம் ஒன்று நின்றது. அம் மரத்தின் உச்சியில் ஒரு பறவை கூடு கட்டி வாழ்ந்தது. அக் கூட்டிலே ஐந்து குஞ்சுகள் இருந்தன.

ஒரு நாள் மாலை தாய்ப்பறவை நெடுந்தூரத்திலிருந்து உணவு கொண்டு வந்தது. அதனை எல்லாக் குஞ்சுகளும் உண்டன.

அவற்றில் ஒரு குஞ்சு தன் தாயைப் பார்த்து "அம்மா, அம்மா! உங்களிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டும். நீங்கள் காலையில் வெளியே சென்றதும் சில மனிதர்கள் நம் வயலுக்கு வந்தார்கள். நெற்கதிர்கள் முற்றி விட்டன. இனி அறுவடை செய்யலாம் என்று பேசிக் கொண்டார்கள்.

அம்மா! எங்களுக்குப் பயமாக இருக்கிறது. நாம் உடனடியாக இந்த இடத்தை விட்டு வேறு இடம் போய்விடுவோம்" என்றது.


தாய்ப் பறவை சிரித்தது. "அதைப் பற்றிப் பின்னர் யோசிக்கலாம். நீ போய் உறங்கு என்றது. தாயார் அலட்சியமாகப் பேசுவதைக் கண்டு குஞ்சுகள் வியப்படைந்தன.

நாட்கள் சில சென்றன. வழக்கம் போல் காலையில் வெளியே சென்ற தாய்ப்பறவை, மாலையில் கூட்டிற்கு இரையுடன் திரும்பியது.

குஞ்சுகள் இரையை உண்டன. குஞ்சுகளில் ஒன்று தன் தாயைப் பார்த்து "அம்மா இன்று என்ன நடந்தது தெரியுமா? நீங்கள் காலையில் வெளியே சென்றதும் யாரோ சிலர் வயலுக்கு வந்தார்கள். நெற்கதிர்கள் நன்றாக முற்றிவிட்டன. பக்கத்துக் கிராமத்தில் இருந்து ஆட்களை வரவழைத்து அறுவடை செய்யலாம் என்றார்கள். அம்மா! நாங்கள் உடனடியாக இந்த இடத்தை விட்டுப் போக வேண்டியது தான்" என்றது.

தாய்ப்பறவை சிரித்தது. "நான் இருக்கும் போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். கவலைப்படாமல் உறங்குங்கள்" என்றது.

நாட்கள் சில ஓடி மறைந்தன. வழக்கம் போல ஒரு நாள் மாலை தாய்ப்பறவை தன் குஞ்சுகளுக்கு இரை கொண்டு வந்தது. அந்த இரையைக் குஞ்சுகள் உண்டன. குஞ்சுகளில் ஒன்று தன் தாயைப் பார்த்து "அம்மா, அம்மா! இன்று காலை யாரோ சிலர் நமது வயலுக்கு வந்தார்கள். இனிமேலும் தாமதிக்காமல் பக்கத்துக் கிராமத்துக்குச் சென்று, ஆட்களைக் கூட்டி வந்து அறுவடையை ஆரம்பிக்கலாம் என்றார்கள். நாங்கள் என்னம்மா செய்வது?" என்று கேட்டது. "இப்போது உறங்குங்கள்" என்றது தாய்ப்பறவை.



இன்னும் சில நாட்கள் கழிந்தன. வழக்கம் போல தாய்ப்பறவை இரையுடன் திரும்பி வந்து குஞ்சுகளுக்கு உணவளித்தது.

ஒரு குஞ்சு அம்மாவைப் பார்த்து "அம்மா! இன்று காலை சிலர் வயலுக்கு வந்து யார் வரவையும் எதிர்பார்க்க வேண்டாம். நாம் நாளையே அறுவடையைத் தொடங்குவோம் என்று பேசிக் கொண்டார்கள். இனி என்னம்மா செய்யலாம்?" என்று கேட்டது.

அதற்குத் தாய்ப்பறவை "இனிமேல் உங்களாலும் பறக்க முடியும். அதிகாலையில் நாம் வேறு இடத்திற்குப் போய் விட வேண்டும். இப்போது அவர்கள் தங்களை நம்பத் தொடங்கி விட்டார்கள். நாளை எப்படியும் அறுவடை செய்து விடுவார்கள். அதன் பின்னர் நாம் இங்கு இருக்க முடியாது" என்றது.

அதிகாலை தாய்ப்பறவை தன் குஞ்சுகளோடு ஏற்கனவே போகத் திட்டமிட்டிருந்த இடத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

நம் வேலைகளை நாமே செய்வோம்.

## பயிற்சி - 21

**(1) வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

(அ) பெரிய மரம் எங்கே நின்றது?

(ஆ) பறவை எங்கே கூடு கட்டி வாழ்ந்தது?

(இ) அப்பறவையுடன் எத்தனை குஞ்சுகள் வாழ்ந்தன?

(ஈ) வயலுக்கு வந்தவர்கள் எதைப் பற்றி உரையாடினார்கள்?

(உ) தாய்ப்பறவை எப்போது புதிய இடத்திற்கு செல்ல முடிவு செய்தது?

**(2) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குங்கள்.**

(அ) இரை / சென்றது / தாய்ப்பறவை / வெளியே / தேடச்

(ஆ) இந்த / போய் / விட்டுப் / இடத்தை / விடுவோம்

(இ) சிலர் / வந்தார்கள் / வயலுக்கு / யாரோ

(ஈ) வேறு / நாம் / அதிகாலையில் / செல்ல / இடத்திற்குச் / வேண்டும்

(உ) நாளையே / நாம் / தொடங்குவோம் / அறுவடையைத்

(3) **"என் அம்மா"** என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* மாணவர்களுக்கு அறிவுரை தரக்கூடிய கதைகளைத் தெரிவு செய்து அவற்றை அவர்கள் வாசிக்க வழிப்படுத்துக.


# உழவுத் தொழில்



பண்டைக் காலம் தொட்டே மக்கள் உழவுத் தொழிலைச் செய்து வருகின்றனர். விவசாயம் செய்ய நீர் தேவை. அதனால் உழவர்கள் நீர் உள்ள இடங்களிலும், ஆறுகளை அடுத்த பகுதிகளிலும் குடியேறி விவசாயம் செய்ய ஆரம்பித்தனர்.

உழவர்கள் மாரி காலத்தில் வேலையை ஆரம்பிப்பார்கள். சிலர் வயலைக் கொத்துவார்கள். சிலர் கலப்பையில் மாடுகளைப் பூட்டி வயலை உழுவார்கள். சில இடங்களில் உழவு இயந்திரத்தால் வயல் உழுவார்கள். நீரைத் தேக்கி வைப்பதற்காக வரம்புகளையும் கட்டுவார்கள். அதன் பின்னர் நீரை வடிந்தோட விட்டு நெல்லை விதைப்பார்கள். சில இடங்களில் பதியம் இட்டிருந்த நாற்றுக்களைப் பிடுங்கி நாற்று நடுவார்கள்.

பின் பசளை இட்டு நீரைத் தேக்கி பயிரை வளர்ப்பார்கள். நெற்பயிர் நன்றாக வளர்ந்து உரிய காலத்தில் கதிர் ஈனும். அக்கதிர்கள் முற்றி விளையும். நெல் விளைந்த பின் அரிவி வெட்டிச் சூடு மிதிப்பார்கள்.



பல மாடுகளை ஒன்றாகப் பிணைத்து சூடு மிதிப்பதன் அழகைப் பார்த்து மகிழலாம். இக்காலத்தில் இயந்திரங்களால் சூடு அடிக்கின்றார்கள்.

சூடு மிதித்த பின் பதரை நீக்கி நெல்லைச் சுத்தப்படுத்துவார்கள். சுத்தப்படுத்திய நெல்லை வீட்டுக்குக் கொண்டு செல்வார்கள். தமது தேவைக்கு ஏற்றவாறு வைத்துக் கொள்வார்கள். மீதியை விற்றுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்வார்கள்.

இவ்வாறு வருடத்தில் இரண்டு முறை அல்லது மூன்று முறை பயிர் செய்வார்கள். உழவர்கள் இவ்வாறு பயிர் செய்யாவிட்டால் நாம் எல்லோரும் உணவு இன்றிப் பட்டினியால் வாட வேண்டி இருக்கும்.

அதனாலே தான்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று பாரதியார் பாடியுள்ளார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்".

என்று வள்ளுவரும் உழவின் சிறப்பினைப் பாடி உள்ளார்.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

## பயிற்சி - 22

**(1) விடைகளை எழுதுங்கள்.**

(அ) இலங்கை மக்களின் பிரதான உணவு எது?

(ஆ) உழவர்கள் எக்காலத்தில் வேலைகளை ஆரம்பிப்பார்கள்?

(இ) எதற்காக வரம்புகளைக் கட்டுகிறார்கள்?

(ஈ) நெல் முற்றி விளைந்த பின் என்ன செய்வார்கள்?

(உ) உழவர்கள் ஒரு வருடத்தில் எத்தனை முறை பயிர் செய்வார்கள்?

**(2) தரப்பட்டுள்ள சொற்களுடன் இரட்டைக் கொம்பைச் ('ே') சேர்த்துச் சொற்களாக்குங்கள்.**

| சாலை | - | சோலை |
|---|---|---|

(அ) வட்டி - வெட்டி

(ஆ) பார் - போர்

(இ) காடு - கோடு

(ஈ) தாள் - தோள்

(உ) காலம் - கோலம்

**(3) பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்.**

(அ) உளவர்கள் - உழவர்கள்

(ஆ) மாறிகாலம் - மாரி காலம்

(இ) மகிளலாம் - மகிழலாம்

(ஈ) நிளல் - நிழல்

(உ) பசலை - பசளை


குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.

# யார் குற்றவாளி

ஒருநாள் கடைவீதியில் மீன் வியாபாரியும் எண்ணெய் வியாபாரியும் பணப் பிரச்சினை தொடர்பாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு வழிப்போக்கன் அங்கு வந்தான். இருவரிடமும் நடந்தவற்றைக் கேட்டான். "சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள். ஒரு யோசனை சொல்கிறேன்" என்றான். இருவரும் என்ன யோசனை என்று கேட்டனர். "பீர்பாலிடம் செல்லுங்கள். நல்ல தீர்ப்புச் சொல்லுவார்" என்றான்.

வழிப்போக்கன் சொன்னபடி பீர்பாலைப் பார்க்க மீன் வியாபாரியும், எண்ணெய் வியாபாரியும் சென்றனர்.



பீர்பாலைக் கண்டதும் எண்ணெய் வியாபாரி அவர் காலில் விழுந்தான். "ஐயா! என் பணப்பையை எடுத்துக் கொண்டு இவர் தரமாட்டேன் என்கிறார். நீங்கள்தான் வாங்கித் தரவேண்டும்" என்றான்.

மீன் வியாபாரி "ஐயா! எண்ணெய்க்காரன் சொல்வதை நம்பாதீர்கள் பணம் என்னுடையது" என்றான்.

பீர்பால் "என்ன நடந்தது என்பதை முழுமையாகச் சொல்லுங்கள்" என்றார்.

மீன்வியாபாரி முதலில் சொன்னான். "ஐயா! இவன் எண்ணெய் வேண்டுமா? என்று கேட்டு என் கடைக்கு வந்தான் . எண்ணெய் வாங்குவதற்காகப் பாத்திரம் எடுக்கக் கடைக்குள் போனேன். அதற்குள் என் பணத்தை இவன் எடுப்பதைப் பார்த்தேன். உடனே பாய்ந்து வந்து அவனிடமிருந்த பணத்தைப் பறித்தேன். இப்போது அப்பணம் தன்னுடையது என்று இங்கு நாடகமாடுகிறான்" என்றான்.

"ஐயா! இவன் சொல்வதை நம்பாதீர்கள். இவன் தான் நாடகமாடுகிறான்" என்றான் எண்ணெய் வியாபாரி.

இப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று யோசித்தார் பீர்பால். சிறிது நேரத்தின் பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு வீரனை அழைத்துப் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார்.

பீர்பாலின் அருகே வீரன் தண்ணீர் கொண்டு வந்தான். "அந்தப் பணப்பையில் உள்ள நாணயங்களைத் தண்ணீருக்குள் கொட்டு" என்று பீர்பால் கட்டளையிட்டார்.

பாத்திரத்தில் உள்ள தண்ணீரின் மேற்பரப்பில் எண்ணெய் மிதந்தது.

"பணப்பை எண்ணெய்க்காரருக்குச் சொந்தமானது நீதான் திருடன்" என்று மீன் வியாபாரியைப் பார்த்துச் சொன்னார் பீர்பால்.

எண்ணெய் வியாபாரி நன்றியுடன் பீர்பாலை வணங்கினான்.

பீர்பாலிடம் மீன்வியாபாரி மன்னிப்புக் கேட்டான். பீர்பால் அவனைப் பார்த்து "எவருடைய பணத்துக்கும் ஆசைப்படாதே. உண்மை பேசி உத்தமனாய் வாழ்" என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்.

உண்மைக்கு என்றுமே அழிவில்லை.

## பயிற்சி - 23

**(1) விடைகளை எழுதுங்கள்.**

(அ) யார் யாருக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது?
(ஆ) அவர்கள் யாரிடம் சென்று முறையிட்டார்கள்?
(இ) தண்ணீர்ப் பாத்திரத்தின் மேற்பரப்பில் மிதந்தது எது?
(ஈ) பணப்பைக்குரிய சொந்தக்காரன் யார்?
(உ) பீர்பாலிடம் மன்னிப்புக் கேட்டவர் யார்?

**(2) கீழ்வரும் சொற்களை 'ம' வரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.**

முகவரி, மொழி, மாடு, மைனா, மோர், மௌனம் மிருகம், மரம், மூக்கு, மீன், மேளம், மென்மை

..........................................................................................

..........................................................................................

**(3) எதிர்க்கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்.**

(அ) இக்கரை - ..................
(ஆ) உள்ளே - ..................
(இ) அண்மை - ..................
(ஈ) குறைவு - ..................
(உ) இன்சொல் - ..................

குறிப்பு:- * இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* நல்வழிப்படுத்தும் கதைகளை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துக.

பாடம் - 24

# தொடர்பு கொள்வோம்.



நாம் இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கின்றோம். விஞ்ஞானத்தின் விந்தைகளைக் கண்டு வியப்படையும் காலமிது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் தகவற் பரிமாற்ற முறைகளிலும் மாற்றங்கள் உருவாகியுள்ளன.

ஆரம்ப காலத்தில் மனிதன் முரசு, தீ போன்றவற்றைப் பயன்படுத்தித் தொலைவில் உள்ளவர்களுக்குத் தகவல் அனுப்பினான். அதன் பின்பு புறா மூலம் தகவல்களைப் பரிமாறினான். அதனைத் தொடர்ந்து கடிதம் மூலமும் தொடர்பு கொள்ள ஆரம்பித்தான். அதன் பின்னர் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டான்.

இன்று நம் வாழ்வோடு கணனியும் இணைந்து விட்டது. பாடசாலைகளிலும் கணனி தொடர்பான கல்வி போதிக்கப்படுகின்றது. ஒரு மனிதனுக்குக் கல்வி அறிவு எவ்வளவு முக்கியமோ அதுபோன்று கணனி அறிவும் மிகவும் அவசியமாகும்.

கணனியின் வருகையால் மனிதர்களுடைய வேலைச்சுமை குறைக்கப்படுகின்றது. தேவையான தகவல்களைக் கணனியில் சேமித்து வைக்க முடிகின்றது. அதேபோன்று கணனி மூலம் பல்வேறு தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

கணனி மூலம் காதுக்கினிய பாடல்களைக் கேட்கலாம். திரைப்படங்களையும் பார்க்கலாம். கணனி மூலம் மற்றவர்களுக்கு மின் அஞ்சல் கடிதங்களையும் அனுப்பலாம்.

இப்போது கணனி வழியாக உலகின் பல இடங்களில் இருப்பவர்களுடனும் தொடர்பு கொள்ள முடியும். இதற்கு "இன்ரநெற்" என அழைக்கப்படும் இணையம் உதவுகின்றது.

கணனியில் இணைய (இன்ரநெற்) இணைப்பை ஏற்படுத்தி நாம் உலகில் பல்வேறு நாடுகளில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு உரையாட முடியும். எமது சந்தேகங்களுக்கான விளக்கங்களைப் பெற முடியும்.

இணையத்தின் மூலம் பல நாடுகளில் உள்ள நூல் நிலையங்களோடு தொடர்பு கொள்ளலாம். இணையத்தின் மூலம் அந் நூலகங்களில் உள்ள நூல்களை வாசிக்கலாம்.

என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? கணனியின் வருகையால் ஏற்பட்ட விந்தைகளைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போகலாம்.

**தகவற் தொடர்புகள் மூலம் அறிவினை வளர்ப்போம்.**

**பயிற்சி – 24**

**(1) தொடர்பு சாதனங்கள் ஐந்தின் பெயர்களை எழுதுங்கள்.**

1. பத்திரிகை ........................................
2. கணனி ........................................
3. தொலைபேசி ........................................
4. தொலைக்காட்சி ........................................
5. வானொலி ........................................

**(2) சொற்களை வைத்து வாக்கியமாக்கி எழுதுங்கள்.**

1. தொலைபேசி – ..............................
2. கணனி – ..............................
3. புறா – ..............................
4. முரசு – ..............................
5. பாடல்கள் – ..............................

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* தொடர்பு சாதனங்களின் படங்களைப் பயிற்சிப் புத்தகத்தில் ஒட்டி அவற்றின் பெயர்களை மாணவர்கள் எழுத வழிப்படுத்துக.

# உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
5. மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
6. தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
7. கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
8. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
9. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
10. செய்ந்நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்.

-உலகநாதர்-

**விளக்கம்:-**

1. **ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.**
ஒருநாளும் படிக்காமல் இருக்கக்கூடாது.

2. **ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.**
மற்றவர் மனம் நோகும்படி தீய சொற்களைப் பேசக் கூடாது.

3. **மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.**
பெற்ற தாயை ஒருநாளும் மறக்கக்கூடாது.

4. **நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.**
தெரிந்துகொண்டே பொய்சொல்லக் கூடாது.

5. **மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.**
மனம் விரும்புவதை எல்லாம் செய்யக் கூடாது.

6. **தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.**
தர்மம் செய்வதை ஒருநாளும் மறக்கவே கூடாது.

7. **கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.**
கற்றவரை ஒருபோதும் இகழ்ந்து பேசக்கூடாது.

8. **மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.**
பெரியோரின் அறிவுரைகளை மறக்கக் கூடாது.

9. **புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.**
யாருடைய மனதும் புண்படக்கூடிய வார்த்தைகளைக் கூறக் கூடாது.

10. **செய்ந் நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.**
தக்க சமயத்தில் ஒருவர் செய்த உதவியை எக் காலத்திலும் மறக்கக் கூடாது.

பயிற்சி - 25

(1) ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுங்கள்.

1. பொல்லாங்கு, ஒருவரையும், வேண்டாம், சொல்ல
2. மறக்க, தருமத்தை, ஒருநாளும், வேண்டாம்
3. போக்கெல்லாம், வேண்டாம், மனம்போன, போக
4. வேண்டாம், ஒருநாளும், மறக்க, செய்ந்நன்றி
5. பழிக்க, ஒருநாளும், கற்றவரை, வேண்டாம்

(2) எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள்.

(அ) இடையன் - இடைச்சி.....

(ஆ) பாடகன் - பாடகி.....

(இ) புதல்வன் - புதல்வி.....

(ஈ) சேவகன் - சேவகி.....

(உ) தலைவன் - தலைவி.....

(3) கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

(அ)

| | | |
|---|---|---|
| கா | க | ம் |
| ப் | | |
| பு | | |

(ஆ)

| | | |
|---|---|---|
| கி | ழ | வி |
| ண | | |
| று | | |

(4) தரப்பட்ட சொல் தொகுதியில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.

(அ) மாதா, அன்னை, பிதா

(ஆ) மதி, நிதி, சந்திரன்

(இ) வானம், ஆகாயம், பூமி

(ஈ) கடவுள், ஆதவன், ஈசன்

(உ) காய், கனி, பழம்

(5) எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுங்கள்.

(அ) இயற்கை – செயற்கை

(ஆ) நீதி – அநீதி

(இ) தர்மம் – அதர்மம்

(ஈ) ஞாபகம் – மறதி

(உ) ஏற்றம் – இறக்கம்

(6) பின்வருவனவற்றின் இளமைப் பெயர்களை எழுதுங்கள்.

(அ) வாழை – குட்டி

(ஆ) மா – கன்று

(இ) காகம் – குஞ்சு

(ஈ) கீரி – பிள்ளை

(உ) ஆடு – குட்டி

(ஊ) நெல் – கதிர்

**(7) எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களாக்குங்கள்.**

(அ) ம் டா ண் வே - வேண்டாம்

(ஆ) ர் த் தோ மூ - மூத்தோர்

(இ) ள் க ற் சொ - சொற்கள்

(ஈ) தை ர் த் வா - வார்த்தை

(உ) ற் ற வ ர் க - கற்றவர்

**(8) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

(அ) பூக்கள் - ............................

(ஆ) பயிர்கள் - ............................

(இ) செய்தி - ............................

(ஈ) தண்ணீர் - ............................

(உ) பத்திரிகை - ............................

(ஊ) முத்திரை - ............................

(9) **"முதியோர்கள்"** என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

குறிப்பு:-
* இவற்றைப் போன்று வேறு பல பயிற்சிகளையும் வழங்கி வழிப்படுத்துக.
* உலக நீதிப் பாடல்களை எழுதி ஒரு சிறிய புத்தகம் தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துக.

24

60
40
100
40
140
50
190
50
240
45
291
45+
336

30
30
60

805
15
190

805
10
795

240
45
285
45
330

795
15
780

116
215+
3.31
142+
473
408+
581

32
6x
192

450
x6
2100

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்கவும்.

பாடசாலையின் பெயர்:- ........................................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2006 | ........................ | ........ | ........ |
| 2007 | ........................ | ........ | ........ |
| 2008 | ........................ | ........ | ........ |
| 2009 | ........................ | ........ | ........ |
| 2010 | ........................ | ........ | ........ |